## கமெண்ட் கந்தர்...

சரி வயது போன நேரத்திலை நெடுமாறன் ஐயா அறளை பேந்து போய் பேசியிருக்கிறார்.. என்ன செய்ய சகிச்சுக்கொள்ள வேண்டியதுதான்...




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 169 சுபகிருது வருடம், மாசி மாதம் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (14.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 22, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50





முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க வேண்டுமென சிலர், ஜனாதிபதிக்கு தூது அனுப்பியுள்ளனர். பொதுஜன பெரமுனவின் பக்கமிருந்தே இந்த தூது சென்றுள்ளது.

அதேசமயம், இப்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன பதவியிலிருந்து இராஜினாமா செய்யத் தயாராக இல்லாததால் அந்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாம். தினேஷ் தனது பாடசாலை வகுப்பு நண்பன் என்பதால் நம்பிக்கைக்குரியவரான அவர் அப்பதவியில் இருப்பதே நல்லதென ரணிலும் நினைக்கிறாராம்.

மஹிந்தவை மீள நியமித்தால் மீண்டும் சர்ச்சைகள் ஏற்படலாமென இன்னொரு கருத்தும் ஜனாதிபதியின் பக்கம் உள்ளதாம்.



# பிரபாகரன் உயிருடன்; விரைவில் வருவார்!

## தமிழக அரசும் மக்களும் உறுதுணையாக இருக்கவேண்டும் எனக்கோரிக்கை

## பழ. நெடுமாறன் பரபரப்புத் தகவல்

(திருச்சி எம். சாஹுல் ஹமீது)

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன்நலமுடன் இருப்பதாகவும் அவரது குடும்பத்தாருடன் தான் தொடர்பில் இருப்பதால் அவர்களின் அனுமதியுடன் இந்தத் தகவலை வெளியிடுவதாகவும் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தமிழகத்தில் நேற்று (13) பரபரப்புத் தகவலை வெளியிட்டார்.

மேலும், தமிழக அரசும் மக்களும் பிரபாகரனுக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து தஞ்சாவூரில் உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் செய்தியாளர்களை சந்தித்துப் பேசியதாவது,

தமிழ்த் தேசிய பேரியக்கத் தலைவர் பிரபாகரன் நலமுடன், உயிருடன் உள்ளார். பிரபாகரன் நலமுடன் இருப்பது ஈழத்தமிழர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும். பிரபாகரன் குறித்து தவறான தகவல் பரப்பப்பட்டுவிட்டது. அவருடன் தொடர்பில்தான் உள்ளோம்.

பிரபாகரன் குடும்பத்தினருடன் நான் தொடர்பில் இருப்பதால் அவர்கள் அனுமதியுடன் இதைக் கூறுகிறேன். இலங்கையின் தற்போதைய சூழல் ஏதுவாக இருப்பதால் பிரபாகரன் உயிருடன் இருப்பதைக் கூறுகிறேன்.

பிரபாகரனின் அனுமதியின் பேரிலேயே செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெறுகிறது. பிரபாகரனின் மனைவி, மகளும் நலமுடன் உள்ளனர். உரிய நேரத்தில் மக்கள் முன்...

02 பக்கம்

## அதிர்வுகள் அதிகரித்தால் ஆபத்து!

மொனராகலையில் தொடர்ச்சியாக நிலநடுக்கம் ஏற்படுமானால் அது குறித்து தீவிர அவதானம் செலுத்தப்பட வேண்டும் - என பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் பிரிவின் பேராசிரியர் கபில தஹநாயக்க தெரிவித்துள்ளார். அந்த மாவட்டத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்ட நிலநடுக்கம் மீண்டும் ஏற்படுமானால் அது கவலையளிக்கும் காரணியாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,...

02 பக்கம்

## 15 வருடங்களுக்குப் பிறகு அரசியல் கைதிகள் நால்வருக்குப் பிணை

தமிழ் அரசியல் கைதிகள் நால்வருக்கு 15 வருடங்களுக்குப் பின்னர் நேற்று (13) பிணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதியான கந்தையா இளங்கோ உள்ளிட்ட 04 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு, காலி மேல் நீதிமன்றத்தில் நேற்று (13) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே பிணை வழங்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு ஒக்டோபர் 18ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்து, 22 பேர் காயமடைந்தமை தொடர்பில் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் 23 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 04 பிரதிவாதிகளுக்கு எதிராக 2010ஆம் ஆண்டு காலி மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

02 பக்கம்

## பிரபாகரன் கொல்லப்பட்டார்: ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன!

### இலங்கை இராணுவம் அறிவிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருப்பதாக உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தமிழகத்தில் நேற்று தெரிவித்ததை இலங்கை இராணுவம் உடனடியாக மறுத்துள்ளது.

பிரபாகரன் நலமுடன் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து இலங்கை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத்திடம் கேட்டபோது, ‘‘தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதிக்கட்ட யுத்தத்தில் கொல்லப்பட்டுவிட்டதற்கான ஆதாரங்கள்...

02 பக்கம்

## மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் ஏகோபித்த தீர்மானம் அவசியம்

### மின்சார சபைக்கும் ஆணைக்குழுவுக்கும் தேசிய பேரவை வலியுறுத்து



மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் நாளை 15ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ள இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முன்னர், மின்சார சபை மற்றும் ஆணைக்குழு என்பன கூடி கலந்துரையாடுமாறு தேசிய பேரவை நேற்று (13) உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியது.

அதற்கமைய அவ்வாறு கலந்துரையாடுவதற்கு இரு தரப்பு அதிகாரிகளும்...

02 பக்கம்



## துருக்கியில் மீண்டும் பதிவான நிலநடுக்கம்

### 40 ஆயிரத்தை அண்மித்த உயிரிழப்புகள்

10 பக்கம்

### மின் கட்டண திருத்தத்துக்கு எதிரான மனு:

## பெப்ரவரி 17இல் நீதிமன்ற அறிவிப்பு

மின் கட்டண திருத்தம் தொடர்பாக அமைச்சரவை எடுத்த முடிவை இரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு உட்படுத்துவதா, இல்லையா என்பது தொடர்பான அறிவிப்பு எதிர்வரும் 17ஆம் திகதி வெளியிடப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மின் நுகர்வோர் சங்கம் மற்றும் சுற்றுச்சூழல் நீதி மையம் சார்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நேற்று (13) சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றக் குழு முன்னிலையில் விசாரணைக்கு ...

02 பக்கம்

## மார்ச், ஏப்ரலில் 10 கிலோ அரிசி

### 39 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்க அரசு தீர்மானம்

நாட்டில் 39 இலட்சம் குடும்பங்களுக்கு எதிர்வரும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் தலா 10 கிலோ கிராம் அரிசியை இலவசமாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்துள்ள மக்களுக்கு இவ்வாறு நிவாரணம் வழங்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர், 2023ஆம் ஆண்டு பெரும்போகத்தின்போது அரசாங்கத்தின் நெல் கொள்வனவுத் திட்டம் அதிக நன்மைகளை வழங்கும் வகையில் அமையவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் தலையிடாவிட்டால் விவசாயிகளின் ...

02 பக்கம்

## முன்மொழிவுகளை பெசிலே நிராகரித்தார்

### கம்மன்பில குற்றச்சாட்டு



நாட்டில் எரிபொருள் விநியோகம் குறித்து தன்னால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை அப்போதைய நிதி அமைச்சராக இருந்த பெசில் ராஜபக்ஷவே நிராகரித்ததாக பிவித்திரு ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கொழும்பிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது, எரிசக்தி அமைச்சர் என்ற...

02 பக்கம்

## ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கொள்வனவு, நெல் கொள்வனவு, போசாக்குக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கும், 2022ஆம் ஆண்டுமுதல் 18,000 இற்கும் மேற்பட்ட ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கான பணிக்கொடை நிலுவைகளை வழங்குவதற்குமான நிதியை விடுவிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை நேற்று அனுமதி.

## சபை அமர்வுகள் 21 முதல் 24 வரை

பாராளுமன்றம் எதிர்வரும் 21ஆம் திகதிமுதல் 24ஆம் திகதி வரை கூடவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் புதிய கூட்டத் தொடரில் முதன்முறையாகக் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தின்போது இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

# தேர்தலுக்கான நிதியை உடன் விடுவிக்கவும்

## நிதி அமைச்சின் செயலரிடம் சிவில் அமைப்புகள் கோரிக்கை

தேர்தலுக்காக வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விடுவிக்குமாறு கோரி, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் உள்ளிட்ட 7 சிவில் அமைப்புகள் கடிதம் அனுப்பிவைத்துள்ளன.

அரசியலமைப்புக்கமைய அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான அதிகாரம் காணப்படும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விடுக்காமலிருப்பதானது, பாராளுமன்றத்தை அவமதிக்கும் செயற்பாடாகும்.

இவ்வாறான நடவடிக்கைகள் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மற்றும் அதிகாரங்களையும் கேள்விக்குறியாக்குவதாகவும் அந்த அமைப்புகள் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளன.

பெவ்ரல், தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் மத்திய நிலையம், ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் மதிப்பீட்டு நிறுவனம், ட்ரான்ஸ்பெரன்ஸி இரன்டர்நெஷனல், கபே அமைப்பு, தாய் நாட்டின் தாய்மார் மற்றும் மகளிர் அமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையம் என்பவற்றினால் இவ்வாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



ஆசிரிய சேவைக்கான தகுதியுடைய பட்டதாரிகளை காலந்தாழ்த்தாது ஆசிரிய சேவைக்கு ஈடுபடுத்தவேண்டும் எனக் கோரி கல்வியியலாளர்கள் பட்டதாரிகள் ஒன்றியம் மற்றும் இலங்கை ஆசிரிய சேவை சங்கத்தினரால் பத்தரமுல்லை இசுறுபாய கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று (13) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# அதிநவீன ட்ரோன் கருவிகளுடன் கல்முனையில் இருவர் கைது

## போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்கள் எனத் தகவல்

(ஷிஹான் பாரூக்)

ஹெரோயின் போதைப்பொருள் முகவராக செயற்பட்ட இளைஞர் உள்ளிட்ட குடும்பப் பெண் ட்ரோன் கருவி, நவீன ஸ்கேனர் கருவிகளுடன் கல்முனை தலைமையகப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை தலைமையகப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் வை.டி.செலரின் தகவலுக்கமைய செயற்பட்ட பொலிஸ் குழுவினர் நேற்று (13) அதிகாலை 33 வயது மதிக்கத்தக்க போதைப்பொருள் வியாபாரி ஒருவரை சாய்ந்தமருது பகுதியில் வைத்து கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து போதைப்பொருளை அளக்கின்ற இலத்திரனியல் தராசு மற்றும் 5 கிராம் 140 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் உள்ளிட்டவை மீட்கப்பட்டன.

இச்சந்தேக நபர் கடந்த ஜனவரி 13ஆம் திகதியன்று வீதியில் பயணம் செய்த பாடசாலை மாணவர் ஒருவரை வாகனம் ஒன்றினால் மோதி தலைமறைவாகி இருந்த நிலையில் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், இச்சந்தேக நபர் அக்கரைப்பற்று, நிந்தவூர், கல்முனை, பெரியநீலாவணை, மருதமுனை, சம்மாந்துறை பகுதிகளுக்கு போதைப்பொருட்களை விநியோகிக்கின்ற பிரதான வியாபாரி என பொலிஸார் குறிப்பிட்டனர்.



தொடர்ந்து கைதான சந்தேக நபரின் கல்முனை மற்றும் சாய்ந்தமருது பகுதியிலுள்ள வீடுகளில் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனைகள் நேற்று மதியம் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறித்த சோதனை நடவடிக்கையின்போது கல்முனை பகுதி செயிலான் வீதியில் அமைந்துள்ள சந்தேக நபரின் சகோதரியின் வீடும் சாய்ந்தமருது பகுதியிலுள்ள சந்தேக நபரின் வீடும் பொலிஸ் குழுக்களினால் சோதனைப்படுத்தப்பட்டன.

இதன்போது ஒரு தொகுதி போதைப் பொருட்கள் 2 அதிநவீன ஸ்கேனர்கள், சிசிரிவி, டிவீஆர் உபகரணம், பதிவுசெய்யப்படாத ட்ரோன் பறக்கும் சாதனம் உள்ளிட்டவை பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

### அதிர்வுகள்...

மொனராகலையில் கடந்த 10, 11ஆம் திகதிகளில் இடம்பெற்ற நிலநடுக்கமானது மெக்னிடியுட் அளவில் 03 ஆகக் காணப்பட்டது. இது கவலையளிக்கும் காரணியல்ல. ஆனால், மீண்டும் மீண்டும் அதிர்வுகள் ஏற்பட்டால் அது தீவிர பிரச்சினையாக மாறும். நம் நாட்டில் ஏற்பட்ட சமீபத்திய நில அதிர்வுக்கு துருக்கியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தை தொடர்புபடுத்த முடியாது - என்றார்.

### மார்ச், ஏப்ரலில்...

விளைபொருட்களை மிகக் குறைந்த விலைக்கே விற்பனை செய்ய வேண்டியிருக்கும். எனவே, அவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டிய தேவை அரசுக்கு உண்டு. அதனாலேயே விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ கிராம் நெல்லை 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளார் - என்றார்.

### மின் கட்டண திருத்தத்துக்கு...

எடுத்துக்கொள்ளப்பட்டது.

மின்சார சபை உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், மின் கட்டண திருத்தம் தொடர்பான அமைச்சரவை முன்மொழிவுகளை நீதிமன்றில் முன்வைத்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம், முன்வைக்கப்பட்ட உண்மைகளைப் பரிசீலித்து, சம்பந்தப்பட்ட மனுவை விசாரிக்க உட்படுத்துவதா, இல்லையா என்று 17ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

### பிரபாகரன்...

தம் வசம் உள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், “2009ஆம் ஆண்டு நடந்த இறுதிக் கட்ட யுத்தத்தில் பிரபாகரன் கொல்லப்பட்டார். டி.என்.ஏ. ஆதாரங்களையும் நாம் எடுத்துள்ளோம். 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி இறுதிக்கட்ட யுத்தத்தில் அவர் கொல்லப்பட்டார்.

அன்றைய தினம் பிரபாகரன் கொல்லப்பட்டமைக்கான டி.என்.ஏ. பரிசோதனை உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களையும் எடுத்துள்ளோம். தவறான தகவல்களை அவர்கள் வெளியிடுகின்றார்கள்.

இந்தக் கூற்று எங்களுக்கு எந்தவித எச்சரிக்கை உணர்வையும் ஏற்படுத்தவில்லை. ஏனெனில், எங்களுக்கு அவர் கொல்லப்பட்டுவிட்டார் என்பது தெளிவாகத் தெரியும், அதில் சந்தேகமே இல்லை என்று பிரிகேடியர் ரவி ஹேரத் பிபிசி தமிழிடம் தெரிவித்துள்ளார்.

### 15 வருடங்களுக்குப்...

வழக்கின் முதலாவது பிரதிவாதியான கந்தையா இளங்கோ, 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், முதலாவது பிரதிவாதியால் வழக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம், 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06ஆம் திகதி இடம்பெற்ற உண்மை விளம்பல் விசாரணையின்போது நீதமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளதை பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், 2009ஆம் ஆண்டு விமானப் படையால் நடத்தப்பட்ட குண்டுவீச்சு தாக்குதலில் முதலாவது பிரதிவாதி தனது வலது காலை இழந்துள்ளதுடன், 15 வருடங்களாக வழக்கு விசாரணை நிறைவுசெய்யப்படாமை குறித்தும் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி மன்றுக்கு எடுத்துரைத்துள்ளார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த காலி மேல் நீதிமன்ற நீதிபதி, 04 பிரதிவாதிகளுக்கும் பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

வழக்கு விசாரணையில் பிரதிவாதி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஆஜராகியதுடன், சட்ட மா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மொஹமட் பாரி மன்றில் ஆஜராகியிருந்தார்.

### பிரபாகரன் உயிருடன்...

வருவார். பிரபாகரன் எங்கு உள்ளார் என்பதை தற்போது அறிவிக்க இயலாது. தமிழக அரசும், மக்களும் பிரபாகரனுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். இலங்கையில் ராஜபக்ஷக்களின் ஆட்சி முடிவுக்கு வந்திருப்பதால் இந்த அறிவிப்பை வெளியிடுகிறோம்.

உரிய நேரத்தில் பிரபாகரன் வெளிப்படுவார். தமிழீழம் பற்றி விரிவான திட்டத்தை பிரபாகரன் விரைவில் அறிவிப்பார். அவர் எங்கே இருக்கிறார்? எப்போது வருவார்? என அறிய உலகத் தமிழர்கள் ஆவலாக இருக்கின்றனர். தமிழீழ மக்களின் விடியலுக்கான திட்டத்தை அவர் விரைவில் அறிவிக்க இருக்கிறார். தமிழீழ மக்களும் உலகத் தமிழர்களும் ஒன்றுபட்டு நின்று அவருக்கு முழுமையான ஆதரவை அளிக்க முன்வருமாறு வேண்டுகிறோம்.

விடுதலைப் புலிகள் வலிமையாக இருந்த காலம் வரை இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதையும் தங்கள் மண்ணில் காலூன்ற அனுமதிக்கவில்லை. இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதனுடனும் எந்த காலகட்டத்திலும் எத்தகைய உதவியும் பெறுவதில்லை என்பதில் தமிழீழத் தேசிய தலைவர் பிரபாகரன் மிக உறுதியாக இருந்தார். தற்போது இலங்கையில் ஆழமாக காலூன்றி இந்திய எதிர்ப்புத் தளமாக அதை ஆக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளதையும் இந்துமா கடலின் ஆதிக்கம் சீனாவின் பிடியில் சிக்கும் அபாயம் இருப்பதையும் எண்ணிப் பார்த்து அதைத் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்திய அரசை வேண்டுகிறோம். இந்த முக்கியமான காலகட்டத்தில் தமிழ்நாடு அரசும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கட்சிகளும் தமிழ்நாட்டு மக்களும் ஒன்றுபட்டு தமிழீழத் தேசிய தலைவர் பிரபாகரனுக்கு துணை நிற்குமாறு வேண்டிக் கொள்கிறோம் என பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை டிஜிட்டல் மயமாகும்

## அமைச்சர் மனுஷ ஓமானில் உறுதி

ஓமானில் தொழில்வாய்ப்புகளுக்கு இலங்கை பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் நடைமுறை தாமதங்களைத் தவிர்க்கும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை டிஜிட்டல் மயமாக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஓமானில் உள்ள தொழிலாளர் ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்களின் தலைவர்கள், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஓமானுக்குச் சென்றுள்ள அமைச்சர் நாணயக்கார, இந்தக் கோரிக்கைக்குப் பதிலளித்து, இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்துள்ளார்.

ஓமானில் வேலைகளுக்கு இலங்கையில் இருந்து தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான விடயங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்காக அமைச்சர் ஓமானில் உள்ள தொழிலாளர் ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்துள்ளார்.

முகவரமைப்பு பிரதிநிதிகள் கூறுகையில், அவர்களில் பலர் தூதரகத்தை அடைய நீண்டதூரம் பயணிக்கவேண்டியிருந்தது, தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒப்புதலைப் பெற இது நேரத்தை வீணடிக்கும். தூதரகத்தில் அதிகாரிகளின் பற்றாக்குறையால், அனுமதி பெறுவதில் மேலதிக நேரம் செலவிடப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை டிஜிட்டல் மயமாக்குவதே இவ்வாறான தொல்லைகளைக் குறைப்பதற்கான சிறந்த வழி. இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதேவேளை, காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக நேர்காணல்களை நடத்தியதன் பின்னர் வீட்டுப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டது.

சுற்றுலா விசா மூலம் ஓமானில் வீட்டு வேலைக்காக பெண் பணியாளர்களை அழைத்து வருவதால் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

### முன்மொழிவுகளை...

வகையில் நாட்டில் உருவாகிய நீண்ட வரிசைகளை என்னால் நீக்க முடியவில்லையெனவும் அதனை தற்போதைய அமைச்சர் காஞ்சன விஜேசேகரவே நீக்கியதாகவும் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்திருந்தார்.

நான் அமைச்சராக இருந்தபோது சமர்ப்பித்த முன்மொழிவுகளையே அரசாங்கம் தற்போது நடைமுறைப்படுத்துகிறது. அப்போது எனது முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு பெசில் ராஜபக்ஷவே தடையாக இருந்தார் என்றார்.

### 21 முதல்...

அதற்கமைய, பெப்ரவரி 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளது. மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 5.00 மணிவரை இலங்கைத் தேயிலைச் சபை சட்டத்தின்கீழ் 2245/29, 2248/36, 2248/37 மற்றும் 2258/14ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட நான்கு ஒழுங்கு விதிகள் மற்றும் கப்பனிச் சட்டத்தின் கீழ் 2303/07ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்படவுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதனையடுத்து, பி.ப. 5.00 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கமைய சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் இடம்பெறவுள்ளது.

பெப்ரவரி 22ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 5.00 மணிவரை கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் 2299/46 மற்றும் 2299/47ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இரண்டு கட்டளைகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்படவுள்ளன. அதனையடுத்து, பி.ப. 5.00 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 23ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 5.00 மணிவரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 2309/40, 2311/08 மற்றும் 2311/18ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மூன்று ஒழுங்குவிதிகள் மற்றும் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2290/24ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்படவுள்ளதாக தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

அதன் பின்னர், இரண்டு தனியார் உறுப்பினர் சட்டமூலங்களான இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழிநுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் மற்றும் ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன இரண்டாம் மதிப்பீட்டை அடுத்து சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படவுள்ளன.

அதனையடுத்து, எதிர்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்கமைய பி.ப. 5.00 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரை விவாதம் இடம்பெறவுள்ளது.

பெப்ரவரி 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் மீதான அனுதாபப் பிரேரணைக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான டில்ஷாட் ரொஹான் திஸ்ஸ அபேகுணசேகர, அப்துல் பாயிஸ் கமர்தீன், அதாவுத செனவிரத்ன மற்றும் திஸ்ஸ ரெஜினோல்ட் பலல்லே ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணை முன்வைப்பதற்கு அன்றைய தினம் மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### மின்கட்டண அதிகரிப்பு...

இணக்கம் தெரிவித்தனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் தேசிய பேரவை நேற்று (13) கூடியபோதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மின்சார சபை 60 வீத கட்டண அதிகரிப்பு கோரியுள்ள பின்னணியில் தேவையான அளவு அதிகரிக்க அனுமதி வழங்கப்படவில்லையெனின் கடுமையான நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிடும் என மின்சார சபையின் தலைவர் இதன்போது குறிப்பிட்டார். அதற்கமைய, எதிர்வரும் காலங்களில் நிலக்கரி இறக்குமதி செய்வதற்குக் கூட நிதி இல்லாமல் போவதால் நீண்டநேர மின் துண்டிப்புக்குச் செல்லவேண்டிய நிலைமை காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சார கட்டணம் அதிகரிப்பது தொடர்பான இறுதித் தீர்மானத்தை நாளை 15ஆம் திகதி அறிவிப்பதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுத்து வருவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். மின்சார சபையின் தரவுகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்துகள் இதுவரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.





பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் தற்பொழுது வெளிநாடு சென்றுள்ளமை குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. பல மாதங்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்டதற்கு அமைய உரிய அனுமதியின்றி அவர்கள் வெளிநாடு சென்றுள்ளதாகவும் இந்த அனைத்து நடவடிக்கைகள் தொடர்பிலும் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரே நடவடிக்கை எடுத்ததாகவும் இதன்போது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் செயலாளர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்பவற்றின் கருத்துகளை கலந்துரையாடி ஒரு கருத்துக்கு வந்து தீர்மானம் எடுப்பது மிக முக்கியமானது என்றும், அவ்வாறில்லையெனின் பொதுமக்கள் கஷ்டத்துக்கு உட்படுவதை தவிர்க்க முடியாமல் போகும் என சுட்டிக்காட்டிய தேசிய பேரவை, இது தொடர்பில் விரைவாகக் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதன் தேவையை வலியுறுத்தியது.

அதேபோன்று, குறுகிய, மத்திய மற்றும் நீண்டகால தேசிய கொள்கைகளைத் தயாரிக்கும்போது முன்னுரிமைகளை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள “தேசிய கொள்கை ஆணைக்குழு” தொடர்பில் உப குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தேசிய பேரவைக்கு விளக்கமளித்தார். இது தொடர்பில் எண்ணக் கருப் பத்திரத்தை தயாரித்து முடித்த பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் இதன்போது ஆலோசனை வழங்கினார். அதற்கமைய தேசிய பேரவையூடாக தேவையான எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதாக பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜேசேகர, டிரான் அலஸ், இராஜாங்க அமைச்சர்களான சிவநேசதுரை சந்திரகாந்தன், டி.வி.சானக, சிசிர ஜயகொடி, பாராளுமன்ற உறுப்பினர்களாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, ஏ.எம். அதாவுல்லா, நாமல் ராஜபக்ஷ மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக்கவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

அதேபோன்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு மற்றும் மின்சார சபையின் அதிகாரிகளும் தேசிய பேரவைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

# போக்குவரத்துக்கு சிரமப்படும் மன்னார் மடுக்கரை கிராமத்து மக்களின் அவலநிலை





(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்தில் வசிக்கும் மக்களின் போக்குவரத்து தேவைகளுக்கு பாலம் அமைத்துக் கொடுக்கப்படாததால் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் தமது கிராமத்திற்கு நேரடியாக வருகை தந்து பார்வையிட்டு உள்ளக வீதி மற்றும் பாலம் போன்றவற்றை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்து மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்தில் 2018ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட 90 குடும்பங்கள் வசிக்கும் இப்பகுதியில் 18 குடும்பங்கள் ஆற்றைக் கடந்து குடியேற்றப் பட்டுள்ளனர்.

வீடுகளுக்கு அருகாமையிலேயே அருவி ஆற்றின் கிளை ஆறு ஓடிக் கொண்டிருப்பதால் தற்காலிக பாலம் கூட அமைத்துக் கொடுக்கப் படாமல் ஆற்றில் இறங்கியே ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

கோடை காலத்தில் ஓரளவு நீர் வற்றிக் காணப்பட்டாலும் மழைக் காலங்களில் ஆற்றில் நீர் நிறைந்து ஓடுவதால் அன்றாடக் கடமைகளை செய்ய முடியாமல் அப்பகுதி மக்கள் திண்டாடி வருகிறார்கள். கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த கடும் மழை காரணமாக போக்குவரத்து பிரச்சினையால் அவர்களின் உறவினர்கள் வீடுகளில் வசித்து வருகிறார்கள்.

அப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதில் இருந்து உள்ளக வீதிகள் ஒழுங்காக அமைத்துக் கொடுக்கப்படாமலும் குறித்த ஆற்றினை கடந்து செல்வதற்கு பாலம் அமைத்துக் கொடுக்கப்படாததாலும் அப்பகுதியில் வசிக்கும் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என்று அனைவரும் அன்றாடப் போக்குவரத்திற்கும் பாடசாலை செல்வதற்கும் அவசர மருத்துவ தேவைகளைப் பெறுவதற்கும் இயலாமல் தவித்து வருகிறார்கள்.

மடுக்கரை மற்றும் முள்ளிமோட்டை கிராமத்தில் உள்ளக வீதிகளை சீரமைப்பது தொடர்பாக உரிய அதிகாரிகள் இன்று வரை எந்த ஒரு நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்தியுள்ளார்கள்.

எனவே, வடக்கு மாகாண ஆளுநர் எமது கிராமத்து மக்கள் மீது அக்கறை கொண்டு தற்காலிகமாக பாலம் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்து மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



துருக்கி மற்றும் சிரியாவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் உயிரிழந்த பொதுமக்களுக்கான அஞ்சலி நிகழ்வு வவுனியாவில் நேற்று (13) இடம்பெற்றது.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் மாசி மாதம் 02ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** தேவையற்ற மன அழுத்தத்தால் உடல் நலத்தை கெடுத்துக் கொள்வீர்கள். எதற்கும் அவசரம் வேண்டாம்.

**ரிஷபம்:** நீங்கள் எதிர்பார்த்த பணம் உங்கள் கையில் கிடைக்கப் போகிறது. காதலில் வெற்றி.

**மிதுனம்:** தாயால் அல்லது தாய் உறவுகளால் அதிக இலாபங்கள். நீண்ட நாள் வழக்குகள் நிறைவடையப் போகின்றது.

**கடகம்:** புத்திரர் செயற்பாடுகளால் கவலையடைவீர்கள். தொழில் வகையில் குறைக்கேட்க வேண்டிவரும்.

**சிம்மம்:** தாயால் கவலைகள் ஏற்படலாம். நீங்கள் பயன்படுத்தும் பொருள்கள் உங்கள் கையால் பழுதடையும்.

**கன்னி:** மனத்துணிவுடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள். நண்பர்களால் மன நிறைவு கொள்வீர்கள்.

**துலாம்:** தேவையற்ற பேச்சுக்கள் வீண் வம்புகளை ஏற்படுத்தும். நம்பியவர்களால் ஏமாற்றப்படுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்ப உறவில் மகிழ்ச்சி கூத்தாடும். புகழ் செல்வம், செல்வாக்கு அனைத்தும் சிறப்புறும்.

**தனுசு:** தேவையற்ற பயணங்களால் தொல்லைகளைச் சந்திப்பீர்கள். வேலையிடத்தில் அவமானம் ஏற்படலாம்.

**மகரம்:** மூத்த சகோதரரால் அதிக நன்மைகளைப் பெறுவீர்கள். அனைத்துவித இலாபங்களையும் பெறுவீர்கள்.

**கும்பம்:** தொழில் வகையில் நீங்கள் எதிர்பார்த்த வரப்பிரசாதங்களை பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்:** சகோதர வர்க்கத்தார்களுடன் வீண் பிரச்சினைகள் வரலாம். தந்தையாருடன் விதண்டாவாதம் வேண்டாம்.

| | | |
|---|---|---|
| திதி | : | அஷ்டமி மு.ப. 9.04 வரை பின் நவமி |
| நட்சத்திரம் | : | அனுஷம் பி.இ. 2.01 வரை பின் கேட்டை |
| யோகம் | : | சித்த யோகம் (சுப காரியம் நன்மை) |
| வார சூலை | : | மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம் | : | மு.ப. 8.31 – 9.31 மணி வரை |
| ராகு காலம் | : | 3.31 – 5.01 மணி வரை |
| எமகண்டம் | : | 9.31 – 11.01 மணி வரை |
| குளிகை | : | 12.31 – 2.01 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : | மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தன அதிர்ஷ்டம் | : | புனர்பூசம், விசாகம், பூரட்டாதி (பிறந்தவர்களுக்கு) |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# 150 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு

## விலை உயர்வால் நோயாளர்கள் பெரும் சிரமம்



நாட்டில் 150 அத்தியாவசிய மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரச வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சைகளை பிற்போடுவதற்கு சுகாதார அமைச்சு எடுத்த தீர்மானத்துடன், மருத்துவ ஆலோசனையின் பேரில் அவை ஒத்திவைக்கப்பட்டதையடுத்து, நோயாளிகள் மிகவும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

தனியார் மருந்தகங்களிலும் மருந்துகளின் விலை உயர்ந்துள்ளதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். நாட்டில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் தட்டுப்பாடு மோசமடைந்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட சுகாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சுமார் 1,300 வகையான மருந்துகள் கிடைக்கப்பெற்றாலும், இதுவரை 140 முதல் 150 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நீரிழிவு நோயாளிகளுக்கு வழங்கப்படும் இன்சுலின், இதய நோயாளிகளுக்கு வழங்கப்படும் அஸ்பிரின், மெட்ஃபோர்மின், சிறு குழந்தைகளுக்கு வழங்கப்படும் பல வகையான சிரப்கள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், வலி நிவாரணிகள், மயக்க மருந்துகள், புற்றுநோய் மருந்துகள் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக சங்கம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

இம்மாதத்தில் பெருமளவிலான மருந்துகள் கையிருப்பில் தீர்ந்துபோவதாகவும் இந்த மருந்து கையிருப்புகளை மீட்பதற்கு அரசாங்கத்தின் தலையீடு மிகவும் குறைவு எனவும் அகில இலங்கை வைத்திய உத்தியோகத்தர் சங்கத்தின் வைத்தியர் நிஷாந்த சமரவீர தெரிவித்தார்.

அத்தியாவசிய மருந்துகள் தொடங்கி புற்றுநோய் மருந்துகள் வரை மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை உள்ளதுடன், சுவாச நோய்களுக்கான மருந்துகள், இரத்தத்தை எடுக்க பயன்படுத்தப்படும் ஊசிகள் என்பவற்றின் இருப்பும் குறைவாக உள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, சுகாதார அமைச்சு 322 பில்லியன் ஒதுக்கீடு செய்ததாகக் கூறுவதில் பயனில்லை என்றார்.

# யாசகம் எடுக்கும் சிறுவர்கள் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கவும்

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

சிறுவர்களை யாசகம் எடுப்பதற்கு பயன்படுத்தப்பட்டால் அது தொடர்பில் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் சிறுவர்கள் யாசகம் எடுக்கும் சம்பவங்கள் வழமையாக அதிகமாக பதிவாகி வருகின்றன.

இந்நிலையில், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களே யாசகம் எடுப்பதற்கு அதிக வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தோட்டக் கிணற்றிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு பகுதியில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் (12) மீட்கப்பட்டுள்ளது.

கெருடாவில் தெற்கு தொண்டைமானாற்றைச் சேர்ந்த ஆரன் பாலசிங்கம் (வயது- 71) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்து சுமார் 600 மீற்றர் தொலைவில் உள்ள தோட்டக் கிணற்றிலிருந்தே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஜப்பானின் தடுப்பு முகாமில் உயிரிழந்த இலங்கைப் பெண்ணின் சிசிரிவி காணொளி

## நகோயா நீதிமன்றம் வெளியிட்டுள்ளது

தடுப்பு முகாமில் உயிரிழந்த இலங்கைப் பெண்ணின் காணொளியை ஜப்பான் நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.

தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைப் பெண்ணின் இறுதி நாட்களைக் காட்டும் காணொளியையே ஜப்பானிய நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.

விசா காலம் முடிவடைந்த நிலையில் சட்டவிரோதமாக ஜப்பான் நாட்டில் குடியிருந்தமைக்காக விஷ்மா சந்தமாலி என்ற 33 வயதான இலங்கைப் பெண், ஜப்பான் நாட்டின் நகோயா நகரில் உள்ள ஒரு தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், மார்ச் 2021இல் உடல்நிலை சரியில்லாமல் காலமானார்.

விஷ்மாவை சட்டவிரோதமாக தடுப்பு முகாமில் தங்கவைத்ததாகவும், அவரது உடல்நிலை மோசமடைந்தபோதிலும் அவருக்கு போதுமான மருத்துவ வசதிகளை வழங்கத் தவறியதாகவும் தெரிவித்து, அவரது குடும்பத்தினர் நகோயா மாவட்ட நீதிமன்றத்தில் ஜப்பானிய அரசாங்கத்திடம் இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்தனர்.

அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை அல்ல என்று அரசு வாதிட்டது.

அதற்கான ஆதாரமாக 295 மணிநேர வீடியோவை வெளியிட்டுள்ளது. அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த தனி அறையின் மேற்கூரையில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கெமராவில் பதிவான, பெப்ரவரி 22 முதல் அவர் இறந்த மார்ச் 6வரையான அவரது இறுதி நாட்களின் காட்சிகளையே நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.

வீடியோவில் விஷ்மா படுக்கையில் படுத்திருப்பதும் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மற்றும் தாதிமாருடன் கலந்துரையாடுவதும் தெரிகிறது.

நீதிமன்றத்தின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக, ஜப்பானிய அரசாங்கம் குறித்த வீடியோ காட்சிகளை ஆதாரமாக சமர்ப்பித்தது.

நீதிமன்ற அனுமதியுடன் குறித்த வீடியோ காட்சிகளை பார்வையிட சகலருக்கும் முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீச்சல் தடாகத்தில் மூழ்கி மாணவன் பலி

பாடசாலை மாணவர் ஒருவர் மஹரகம நகரசபைக்கு சொந்தமான நீச்சல் தடாகத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக மஹரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பியகம பகுதியைச் சேர்ந்த திதுல ரஷ்மிகா என்ற 17 வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் நான்கு நண்பர்களுடன் நீச்சல் தடாகத்தில் நீராடச் சென்றபோதே இந்த மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

# கடவுச்சீட்டு விநியோகம் தற்காலிக நிறுத்தம்

நாட்டிலுள்ள குடிவரவுத் திணைக்கள அலுவலகங்கள் ஊடாக வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவுத் திணைக்களத்தின் இணைய முறைமையில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக இவ்வாறு கடவுச்சீட்டுகளை வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், தற்போது அதனை சரிசெய்யும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



இதேவேளை, ஒருநாள் சேவையின் ஊடாக வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்த நபர்களுக்கு ஸ்பீட் போஸ்ட் ஊடாக அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# பேஸ்புக் களியாட்டத்தில் ஈடுபட்ட 31 பேர் கைது

பியகம பண்டாரவத்த பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் முகப்புத்தகம் ஊடாக ஒழுங்குசெய்யப்பட்டு களியாட்டத்தில் ஈடுபட்ட 31 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து போதைப்பொருள் மற்றும் போதைவில்லைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்குளி, முகத்துவாரம், வெல்லம்பிட்டி, மருதானை, கிரேண்ட்பாஸ், பேலியகொடை மற்றும் களனி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# வவுனியாவில் வீதிகளில் குப்பைகளை கொட்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

வவுனியா புகையிரத நிலைய வீதியில் குப்பைகளை கொட்டுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பொலிஸார் தெரிவித்தனர்.

பல நூற்றுக்கணக்கான மக்கள் பயன்படுத்தும் வீதிகளில் பிரதேசவாசிகள் கழிவுகளை வீசுவதால் வீதியோரங்களில் துர்நாற்றம் வீசுவதுடன், வீதியை பயன்படுத்தும் மக்களுக்கும் தொற்றுநோய்கள் உருவாகும் சவால்நிலையும் தோன்றியுள்ளது.

குறித்த வீதியில் குப்பைகளை வீசிச் செல்வது அதிகரித்த நிலையில், அப்பகுதிகளிலுள்ள அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகளில் உள்ள சி.சி.ரி.வி. காணொளிகள் பரிசோதிக்கப்பட்டு, வீதியில் குப்பைகளை வீசிச் செல்பவர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கம், முச்சக்கரவண்டி இலக்கம் ஆகியன பதிவாகியுள்ளமையுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. மேலும், வீதிகளில் குப்பைகள் வீசப்படும் அனைத்து பகுதிகளிலும் இரகசிய அவதானிப்புகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, பெப்ரவரி 14ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

# விரையவேண்டும் அரசு!

நாட்டில் நிலவும் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களின் தட்டுப்பாடு காரணமாக அரச வைத்தியசாலைகளில் அவசரமற்ற சத்திர சிகிச்சைகளை தாமதப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மருந்துகளினதும், உபகரணங்களினதும் தட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு, சுகாதார நிபுணர்களின் ஆலோசனைக் கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். எனினும், அத்தியாவசியமான சத்திர சிகிச்சைகளை தாமதமின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு வைத்தியசாலைகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அரச வைத்தியசாலைகளில் சுமார் 140 மருந்து வகைகளுக்கு தற்போது தட்டுப்பாடு நிலவுவதாகக் குறிப்பிட்டுள்ள சுகாதார அமைச்சர், இவற்றில் 40 வகையான மருந்துகள் இந்த வாரத்திற்குள் கிடைக்கவுள்ளதாக மேலும் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் சுகாதார அமைச்சின் ஊழல், மோசடிகளால் நாட்டில் இந்த நிலைமை உருவாகியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள தொழிற்சங்கங்கள், இப்படியான பாரதூர நிலைமையை ஏற்படுத்திவிட்டு இப்போது மக்கள் மீது சுமையை சுமத்துவது நியாயமாவென கேள்வியெழுப்பியுள்ளன. சுகாதார அமைச்சின் இந்தத் தீர்மானம் கடும் விமர்சனங்களை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது.

அவசர சத்திர சிகிச்சைகள், அவசரமற்ற சத்திர சிகிச்சைகள் என்று மருத்துவ தேவைகளை பிரித்துச் சொல்வதற்கும் அந்த அடிப்படையில் சுகாதார விடயங்களை கையாள்வதற்கும் சுகாதார அமைச்சு எந்த அடிப்படையில் தீர்மானித்துள்ளது என்பதுதான் புரியவில்லை. மருத்துவ நிபுணர்கள் சிபாரிசு செய்தால் சத்திர சிகிச்சைகளை முன்னுரிமை அடிப்படையில் செய்யலாம் என்ற சுகாதார அமைச்சின் ஆலோசனை சாதாரண மக்களுக்கு ஏற்றதல்ல. நிதி வசதி படைத்தவர்கள், செல்வாக்கு மிக்கவர்கள் தங்களின் இயலுமையைப் பயன்படுத்தி அறுவை அல்லது அவசர சத்திர சிகிச்சைகளை துரிதப்படுத்திக்கொள்ளலாம். ஆனால், அரச மருத்துவ உதவிகளை, அரச மருத்துவமனைகளையே நம்பியிருக்கும் சாதாரண மக்களுக்கான தீர்வு என்ன? அவர்கள் உரிய நேரத்தில் உரிய அவசர சிகிச்சைகளை செய்துகொள்ளாமல் பாதிக்கப்படப் போகிறார்களா?

அவசர சிகிச்சைகளை துரிதமாகவும், அவசரமற்ற சத்திர சிகிச்சைகளை ஆறுதலாகவும் செய்துகொள்ளலாம் என்று தீர்மானித்திருக்கும் இந்த அரசாங்கத்தின் சாதாரண அரசியல்வாதிகளோ இருமல், தடிமன் வந்தாலோ சிங்கப்பூர் சென்று சிகிச்சை பெறும் நிலையில் உள்ளவர்களே. கிராமப்புறங்களில் இருந்து பல மணிநேரம் போக்குவரத்து செய்து கிராமப்புற, நகர்ப்புற அல்லது தேசிய வைத்தியசாலைக்கு வரும் இந்நாட்டின் சாதாரண மக்களது கஷ்டநஷ்டங்கள் அவர்களுக்குப் புரிவதில்லை. அதனால்தான் இப்படியான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

மருத்துவத்துறையைப் பொறுத்தவரை, அந்தத் துறையானது தொலைநோக்குத் திட்டங்களை கொண்டிருக்க வேண்டும். அவசர ஆபத்து அல்லது பேரழிவொன்று நடந்தால் அதனை எதிர்கொள்ளத் தயார் நிலையில் நாடொன்றின் சுகாதாரத்துறை இருத்தல் வேண்டும். அப்படியில்லாமல் இன்று மருந்துகளை அதிகளவில் வழங்கினால் நாளைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுமென்றோ அல்லது நோயாளர்கள் வருகை அதிகரிக்காது, பேராபத்துகள் எதுவும் நடக்காது என்றோ வாளாவிருக்க முடியாது சுகாதாரத்துறை.

நாட்டில் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்ட பின்னர் மிகவும் அத்தியாவசியமான துறையான சுகாதாரத் துறையே பெரிதும் சவால்களை எதிர்கொண்டது. முகக் கவசம் முதல் மருத்துவப்பொருட்கள் வரை விலைகள் வானளாவ உயர்ந்துள்ளன. முன்னர் சாதாரண ரூபாக்களில் பேசப்பட்ட மருந்துகள் இப்போது ஆயிரம் என்ற அடிப்படையில் எகிறியுள்ளன. மருந்துகளை வாங்கவும் மக்கள் கடன்படவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை இருக்கிறது. அதுதான் உண்மை.

கொரோனா தொற்று பரவிய காலத்தில்கூட ஏராளமான வெளிநாட்டு மருத்துவ உதவிகளை இலங்கை அரசாங்கம் பெற்றது. அதன் பின்னர் பொருளாதார நெருக்கடி ஏற்பட ஆரம்பிக்கும்போதே முன்னாயத்தம் செய்து மக்களை காக்கும் திட்டங்களை அரசாங்கம் செய்யவில்லையா? வாராவாரம் கூடும் அமைச்சரவையும், அடிக்கடி கூடும் நாடாளுமன்றமும் இந்த பிரச்சினைகளை கவனத்திற்கொள்ளவில்லையா?

சுகாதார அமைச்சு இனியும் மக்களின் உயிர்களோடு விளையாடாமல் இப்போதாவது துரித நடவடிக்கைகளை எடுத்து மக்களின் உயிர்காக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். 'வருமுன் காப்போம்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் விரைந்து செயற்படவேண்டும் அரசாங்கம்.



# இயற்கை உரமாக பசளை நீரைப் (பயோஸ்லரி) பயன்படுத்த முடியுமா?

எமது நாட்டின் பொருளாதாரத்தில் விவசாயத் துறையானது மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. நம் நாட்டு விவசாயிகள் கடந்த சில காலமாக பல இன்னல்களை எதிர்நோக்கி வருவது அனைவரும் அறிந்த உண்மையே. அவற்றில் ஒன்றே இரசாயன பசளைத் தட்டுப்பாடாகும். இதன் விளைவாக விவசாயிகள் தற்போது சேதனப் பசளை உபயோகத்தை நாடுவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆனால், எம்மில் எத்தனை பேருக்கு இரசாயனம் அற்ற விவசாயத்திற்கு பசளை நீரைப் (பயோஸ்லரி) பயன்படுத்துவது பற்றி தெரியும்?

மக்களுக்கு கழிவுகளை அகற்றும் முறைகள் பற்றிய விழிப்புணர்வு இன்மையே இன்று உலகளவில் பேசுபொருளாக சுற்றுச்சூழல் மாசுபாடு காணப்படுகின்றது. எமது சுற்றுச்சூழலில் உள்ள கழிவுகளை அகற்றுவதற்காக வெவ்வேறு நுட்பங்கள் காணப்பட்டாலும், அதனை மக்கள் சரியான விதத்தில் பயன்படுத்துகின்றனர் என்பது சந்தேகத்துக்குரிய விடயமே.

இதற்கான தீர்வுகளில் அண்மைக் காலமாகவே உயிர் வாயு தயாரிப்பு (பயோ கேஸ்) பற்றி விவசாயிகள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். உயிர் வாயு தயாரிப்பு என்பது ஒரு மூடிய அமைப்பொன்றில் ஒட்சிசன் இல்லாத நிலையில் விலங்குகளின் கழிவுகள், தாவரக் கழிவுகள், மற்றும் சமையலறைக் கழிவுகள் போன்றவற்றிலிருந்து காற்றில்லா செரிமானத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றது. உயிர் வாயுவை (பயோகேஸ்) தயாரித்த பின்னர் எஞ்சும் கழிவு திரவ நிலையில் வெளியேற்றப்படும். அதனையே பசளை நீராக (பயோஸ்லரி) விவசாயிகள் பயன்படுத்துவர்.

சில ஆய்வுகளின் அடிப்படையில், உயிர் வாயுவின் (பயோ கேஸ்) திரவநிலை கழிவான பசளை நீரில் (பயோஸ்லரி) கணிசமான அளவு கரிம கார்பன் (சி) காணப்படுவதுடன், N,P,K மற்றும் Ca, Mg, Fe, Mn, Zn ஆகியவற்றைக் கொண்டிருப்பதும் அறியப்பட்டுள்ளது. விலங்குகளின் சிறுநீரைச் சேர்க்கும்போது அதில் அதிகளவு நைட்ரஜன் உயிர்ச்சத்துகள் காணப்படுகின்றன. ஆய்வுகளில் பசளை நீரை (பயோஸ்லரி) சிறந்த உரமாக பரிந்துரை செய்வதற்கான காரணம் இது நீண்ட கால பயிர் உற்பத்திக்கு ஊட்டச்சத்துகளை பல்வகைப்படுத்துகிறது. அது மட்டுமன்றி, பசளை நீரின் (பயோஸ்லரி) பயன்பாடு மண்ணின் காற்றோட்டம் மற்றும் கட்டமைப்பை மேம்படுத்துவதுடன், பயிர்களுக்கு நீர் தக்கவைப்பையும் அதிகரிக்கிறது.

பிற நாடுகளில் அதிகளவு இயற்கை உரமாகப் பயன்படுத்தப்படும் பசளை நீர் (பயோஸ்லரி) எமது நாட்டில் ஆங்காங்கு பயன்பாட்டில் உள்ளது என்றே கூறலாம்.

மட்டக்களப்பு சேத்துக்குடா கிராமத்தில் வசிக்கும் 42 வயதான பிரியவரதன் என்பவர் நவீன மாதிரியில் அமைந்த திறந்த வெளி பண்ணை அமைப்பை அமைத்து, பண்ணைக் கழிவுகளான சாணம் மற்றும் சிறுநீர் போன்றவற்றை மாத்திரம் பயன்படுத்தி சிறியளவில் அமைக்கப்பட்ட உயிர் வாயுத் (பயோ கேஸ்) தொகுதிக்குச் செலுத்துவதிலிருந்து உயிர் வாயுவை உற்பத்தி செய்து தனது அன்றாடத்



தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றார். இவர் உயிர் வாயுத் தயாரிப்பின் (பயோ கேஸ்) மூலம் கிடைக்கப்படும் நைதரசன் செறிவுமிக்கத் திரவக் கழிவுகளை வெறுமனே கழிவுகளாக வீண் செய்யாமல் அவற்றை பசளை நீராகப் பயன்படுத்தியும் விற்பனை செய்தும் வருவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், அவர் பசளை நீர்ப் பயன்பாட்டைப் பற்றி குறிப்பிட்டபோது பயிர்களின் அளவிற்கேற்ப பசளை நீரை (பயோஸ்லரி) நீருடன் கலந்து பயன்படுத்த வேண்டும். இதனை இரண்டு முறையாக எம்மால் பயன்படுத்த முடியும். நீருடன் கலந்து வேருக்கு உரமாகவும் வெள்ளைப் பூண்டு மற்றும் மிளகாய்த்தூள் கலந்து கிருமி நாசினியாகவும் பயிர்களுக்குப் பயன்படுத்த முடியும். மக்கள் இதனை வாங்கிப் பயன்படுத்துவதற்கு ஆர்வம் காட்டுவதில்லை. பயோஸ்லரி பற்றித் தெரிந்தவர்களே இதனை கொள்வனவு செய்ய முன்வருவதாக சுட்டிக்காட்டியதுடன், தான் இதனை மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் மற்றும் சில விவசாயிகளுக்கும் விற்பனை செய்வதாகக் குறிப்பிட்டார். மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷனிடம் இது பற்றிக் கேட்கும்போது இவ்வாறு கருத்துத் தெரிவித்தனர்.

"நாங்கள் பிரியவரதனிடமிருந்து கடந்த இரண்டு வருடங்களாக பசளை நீரை (பயோஸ்லரி) கொள்வனவு செய்து வருகின்றோம். நாட்டில் ஏற்பட்ட உரத்தட்டுப்பாட்டின் பின்னர் மாட்டெரு, ஆட்டெரு போன்றவற்றிற்கு கிராக்கி ஏற்பட்டிருக்கும் நிலையில், அவற்றை கொள்வனவு செய்வதில் சிரமம் ஏற்பட்டதால் தற்போது அதிகளவில் பசளை நீரை (பயோஸ்லரி) பயன்படுத்தி வருகின்றோம். 20 லீற்றர் பசளை நீரை (பயோஸ்லரி) 200 ரூபாவிற்கு கொள்வனவு செய்வதுடன், அதனை இங்கு காணப்படும் மரக்கறிப் பயிர்கள், பழப்பயிர்கள் மற்றும் கோயிலுக்குத் தேவையான பூக்கன்றுகளுக்குப் பயன்படுத்துவதுடன், அவற்றின் பூத்தல் - காய்த்தலில் வித்தியாசத்தையும் எம்மால் காணக்கூடியதாகவுள்ளது'' என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு சில பிரதேசங்களில் மக்கள் பசளை நீரை (பயோஸ்லரி) விவசாயத்திற்கு பயன்படுத்துமிடத்து ஒப்பீட்டளவில் பார்க்கும்போது மட்டக்களப்பில் மிக அரிதாகவே இதனைப் பயன்படுத்துகின்றனர் என மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் த.செந்தூரன் குறிப்பிட்டார். மேலும்



அவர் கூறியதாவது,

"பிரியவரதனின் பண்ணையிலிருந்து பெறப்பட்ட பசளை நீரை (பயோஸ்லரி) பயிர்களுக்கு செலுத்தி பரிசோதித்தபோது அதன் விளைச்சலில் மாற்றம் தென்பட்டதுடன், இது ஒரு சிறந்த பூச்சிக் கொல்லியாகவும் காணப்படுகின்றது. ஆரோக்கியமான உணவைப் பெறுவதற்கு பசளை நீர் (பயோஸ்லரி) பயன்பாடு அவசியமானதொன்றாகும். பசளை நீர் (பயோஸ்லரி) பயன்பாட்டை மக்கள் மத்தியில் அதிகரிப்பதற்கு இது பற்றிய விழிப்புணர்வை மேற்கொண்டு வருகிறேன்'' என்று கூறினார்.

ஒன்றிணைந்த பண்ணை மற்றும் சேதனப் பசளை உற்பத்தி மையத்தை தொடங்குவதற்காக சிறிய அளவில் வேலைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தனது முயற்சிக்கு முதலீட்டாளர்கள் கிடைக்குமிடத்து பாரியளவில் உயிர் வாயுவைத் தயாரித்து பாதுகாப்பான முறையில் விற்பனை செய்ய முடியும் எனவும் அதன் பக்க விளைவாகக் கிடைக்கும் நைதரசன் செறிவுமிக்க திரவ கழிவுகளையும் பசளை நீராக விநியோகம் செய்ய முடியும் எனவும் பிரியவரதன் குறிப்பிட்டார்.

**அஞ்ஜலா சஜீந்தன்**
**மட்டக்களப்பு.**

# காதலர் தினத்தின் இரத்தச் சரித்திரம்:
# யார் இந்த வெலன்டைன்?

கி.பி. 268 - 270 காலத்தில் வாழ்ந்த ஒரு பாதிரியார்தான் புனித வெலன்டைன். இந்த காலகட்டத்தில் ரோம் நாட்டை இரண்டாம் கிளாடியஸ் எனும் பேரரசன் ஆண்டு வந்தான். ஆண்கள் திருமணம் செய்துகொள்வதன் காரணத்தினால், மனைவி மற்றும் குடும்பத்தினர் மீதே அவர்களுக்கு அதிக பிடித்தம் இருக்கிறது என்றும் இதன் காரணமாகத்தான் ஆண்களுக்கு இராணுவத்தின் மீது பிடிப்பு ஏற்படுவதில்லை என்றும் பேரரசன் இரண்டாம் கிளாடியஸ் கருதினான். இதன் விளைவாக யாரும் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்கிற விசித்திர சட்டத்தை நாடு முழுவதும் அமுல்படுத்தினான் இரண்டாம் கிளாடியஸ். இந்தச் சட்டத்தின் மூலம் இராணுவத்தைப் பலப்படுத்தலாம் என்பதே இரண்டாம் கிளாடியஸ்ஸின் எண்ணமாக இருந்தது.

இந்த காலகட்டத்தில் புனித வெலன்டைன் நிறைய இளம் காதலர்களுக்கு இரகசியத் திருமணங்களைத் செய்து வைத்தார். இதை அறிந்த இரண்டாம் கிளாடியஸ், வெலன்டைனைத் தனது நீதிபதி முன் நிறுத்தினான். அப்போது, வெலன்டைனை வீட்டுக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து, வெலன்டைன் நீதிபதியை கிறிஸ்தவ சமயத்துக்கு மதமாற்றம் செய்ய முயற்சித்தார். நீதிபதியும் வெலன்டைனின் சவாலை ஏற்று, கண் தெரியாத தன் மகளுக்கு கண் பார்வையைக் கொண்டு வருமாறு கூறினார். வெலன்டைனும், அவரது மகள் தலையில் கை வைத்து, இறைவனிடம் பிரார்த்தித்தார். இதையடுத்து அந்தப் பெண்ணுக்கு பார்வை வந்தது. இதையடுத்து, வெலன்டைனை விடுவித்த நீதிபதி, தானும் கிறிஸ்தவ சமயத்துக்கு மதம் மாறினார்.

ஆனால், மீண்டும் கைது செய்யப்பட்ட வெலன்டைன், இந்த முறை பேரரசன் முன்பே நிறுத்தப்பட்டார். அந்தப் பேரரசன் அவருக்கு மரண தண்டனை வழங்கினான். அதுவும் அடித்தே கொலை செய்யப்பட வேண்டும் என்பதுதான் தண்டனை. ஆனால், அது முடியவில்லை என்றதும் வெலன்டைனின் தலை துண்டிக்கப்பட்டு அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த தண்டனை நிறைவேற்றப்பட்ட தினம்தான் பெப்ரவரி 14.

வரலாற்றுப் பக்கங்களில் ஏறத்தாழ 10க்கும் மேற்பட்ட வெலன்டைன்கள் இருந்திருக்கின்றனர். இதில் இருக்கும் மற்றொரு குழப்பம், கி.பி. 270 காலகட்டத்தில் இதே இரண்டாம் கிளாடியஸ் பேரரசனால் மற்றுமொரு வெலன்டைனும் தண்டிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதனால், இந்த இரண்டு வெலன்டைன்களில் எந்த வெலன்டைனைக் குறிப்பிட்டுத் தற்போது காதலர்



தினம் கொண்டாடப்படுகிறது என்பது உறுதியாகத் தெரியவில்லை. மேலும், ஒரே காலகட்டத்தில் இரண்டு வெலன்டைன்கள் இருந்திருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதால் இருவரும் ஒரே வெலன்டைனாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. இரண்டு வெலன்டைன்களும் பெப்ரவரி 14ஆம் திகதியே தண்டிக்கப்பட்டதால் இந்தக் குழப்பம் நிலவுகிறது.

எனினும், பெப்ரவரி 14 அன்று தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட வெலன்டைன் ஒவ் டெர்னி என்பவரே தற்போதுவரை பெரியளவில் கொண்டாடப்பட்டு வருகிறார்.

இருந்தபோதிலும், கி.பி. 496இல்தான் முதலாம் போப் கெலாசியஸ், வெலன்டைனைக் கொண்டாட வேண்டும் என முடிவெடுத்து அறிவித்தார். இதுவரை வெலன்டைன் போற்றப்பட்டுக் கொண்டாடப்பட்டதற்கான போதிய தரவுகளும் ஆதாரங்களும் இல்லை.

அதேசமயம், வெலன்டைனைக் கொண்டாடினாலும் அதைக் காதலர்களுக்கான தினமாகக் கொண்டாடியதற்கான தரவுகளும் இல்லை. ஜெஃப்ரி சாவ்சர் எனும் கவிஞரே 1382இல் தன்னுடைய கவிதையில் முதன்முறையாக வெலன்டைன் கொண்டாட்டத்தைக் காதலர்களுக்கான கொண்டாட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் பிறகே, வெலன்டைன் கொண்டாட்டம் காதலர்களுக்கான தினமாகக் கொண்டாடப்பட ஆரம்பித்தது.

இதையடுத்து, 1840இல் வாழ்த்து அட்டைகள் பிரபலமாகத் தொடங்கின. இதைத் தொடர்ந்து, வாழ்த்து அட்டைகளுடன் இனிப்புகள், பூங்கொத்துகள் உள்ளிட்ட பரிசுகள் பரிமாறத் தொடங்கப்பட்டன. கிறிஸ்மஸுக்குப் பிறகு, அதிகளவில் வாழ்த்து அட்டைகள் பரிமாறத் தொடங்கிய கொண்டாட்டமாக காதலர் தினம் தற்போதுவரை கொண்டாடப்பட்டு வருகிறது.

**கௌதம்**

## இன்றைய நாளில்..

- 1815 – கண்டிப் போர்கள்: கண்டி இராச்சியத்தைப் பிரித்தானியர் கைப்பற்றினர். கண்டி ஒப்பந்தம் மார்ச் 2இல் கையெழுத்திடப்பட்டது.
- 1924 – ஐ.பி.எம். நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1961 – 103ஆவது தனிமம் இலாரென்சியம் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1987 – யாழ்ப்பாணம், கைதடியில் இடம்பெற்ற வெடி விபத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பொன்னம்மான் உட்பட ஏழு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.
- 1987 – தமிழீழ விடுதலைப் புலிகளின் 'நிதர்சனம்' தொலைக்காட்சி சேவை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1989 – ஜி.பி.எஸ். திட்டத்தின் 24 செய்மதிகளில் முதலாவது விண்ணில் ஏவப்பட்டது.
- 1989 – 'சாத்தானின் கவிதைகள்' நூலை எழுதியதற்காக சல்மான் ருஷ்டிக்கு ஈரானியத் தலைவர் ரூகொல்லா கொமெய்னி மரண தண்டனை விதித்தார்.

1990 – வொயேஜர்-1 விண்கலம் பூமியின் படம் ஒன்றை எடுத்தது. இப்படம் பின்னர் 'வெளிர் நீலப் புள்ளி' எனப் பெயர் பெற்றது.

2000 – நியர் சூமேக்கர் என்ற விண்கலம் 433-ஈரோஸ் என்ற சிறுகோளின் சுற்று வட்டத்துக்குள் பிரவேசித்தது. சிறுகோள் ஒன்றின் சுற்றுக்குள் சென்ற முதலாவது விண்கலம் இதுவாகும்.

2011 – அரேபிய வசந்தம்: பஹ்ரைன் எழுச்சி ஆரம்பமானது.

2017 – ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு: தமிழக முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா, வி.கே.சசிகலா உட்பட நான்கு பேர் குற்றவாளிகள் என இந்திய உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

## நக்கல் நமசிவாயம்

பிரபாகரன் உயிரோட இருப்பதா நெடுமாறன் ஐயா சொல்லுறார்... ஏதோ புது யாவாரத்துக்கு திட்டம் போட்டுட்டாங்கள் போலக் கிடக்குது...!



# பிபில பகுதியில் வீடொன்றை உடைத்து தங்க நகை மற்றும் பணம் கொள்ளை

(மொனராகலை நிருபர்)

பிபில, மெதகம ஐவெல பகுதியிலுள்ள வீடொன்றை உடைத்து ஒரு இலட்ச ரூபா பெறுமதியான தங்க நகைகள், 11 ஆயிரம் ரூபா பணம் நேற்று (13) திருடப்பட்டுள்ளதாக பிபில பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் உரிமையாளர் ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் என்பதுடன், அவரும் அவரது குடும்பத்தினரும் உறங்கிக்கொண்டிருந்தபோது, ஜன்னலில் இருந்த கிரில்லை அகற்றி உள்ளே நுழைந்து அறையின் அலுமாரியில் இருந்த பணம் மற்றும் இரண்டு தங்க மோதிரங்களை எடுத்துச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

பிபில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பிட்டிய சுமன தேரர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிச்சூடு!




மட்டக்களப்பு ஸ்ரீ மங்களாராம மற்றும் கெவிலியாமடு விகாரைகளின் விகாராதிபதி அம்பிட்டிய சுமன தேரர் மீது இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் நேற்று (13) அதிகாலை துப்பாக்கிச்சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டில் தேரருக்கு காயம் ஏதும் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூடு நடந்தபோது தேரர் அறையில் வேலை செய்து கொண்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் தொடர்பான உங்கள் அவதானம் இன்னும் அதிகரிக்க வேண்டும்

## பா.ஜ.க. அமைச்சர் முருகன், அண்ணாமலை ஆகியோரிடம் மனோ எம்.பி. கோரிக்கை

இந்தியாவை எந்தக் கட்சி ஆள்கிறது என்பது இந்திய உள்விவகாரம். அதில் நாம் தலையிடோம். இப்போது ஆள்கின்ற கட்சி உங்கள் பாரதீய ஜனதா கட்சி. மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை, மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகன் மற்றும் பாரதீய ஜனதா கட்சியின் தமிழக கிளைத் தலைவர் கே.அண்ணாமலை ஆகிய நீங்கள் இருவரும் உங்கள் கட்சியின் இரண்டு பிரதான ஆளுமைகள். உங்கள் கட்சி, அரசாங்கம் சார்பில் நீங்கள் இருவரும், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் தொடர்பில் அதிக அவதானம் காட்டவேண்டும். தொப்புள்கொடி உறவுகளான எம்மீது, அக்கறை இன்னமும் கணிசமாக அதிகரிக்கவேண்டுமென எதிர்பார்ப்பதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்த அமைச்சர் முருகன் மற்றும் அண்ணாமலை ஆகியோருக்கும், இலங்கை அரசியல், சமூக தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

தென் தமிழக மாவட்டங்களான திருச்சி, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலிருந்து சரியாக 1823ஆம் ஆண்டுமுதல் இலங்கைக்கு ஆங்கிலேயரால் கொண்டுவரப்பட்டு, இன்றைய 2023இல் 200 ஆண்டுகளை நிறைவுசெய்யும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் தொடர்பில் உங்கள் அரசும், நாடும் அதிக அக்கறைகொள்ள வேண்டும் என நான் கோருகிறேன்.

1964ஆம் ஆண்டின் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் எம்மை இந்நாட்டில் பலவீனப்படுத்திவிட்டது. இந்த ஒப்பந்தம் நடைபெற்று, நமது மக்கள் நாடு கடத்தப்பட்டிருக்காவிட்டால், இன்று இலங்கை நாடாளுமன்றத்தில் சுமார் 25 மலையகத் தமிழ் எம்.பிக்கள் இருந்திருப்போம். வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பிக்களுடன் சேர்த்து சுமார் 50 தமிழ் எம்.பிக்கள் அரசியல் பலத்துடன் இலங்கையில் இருந்திருக்கவேண்டிய நிலைமையை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இல்லாமல் செய்துவிட்டது.

அந்த சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் எஞ்சியவர்களுக்கு இலங்கை முழு குடியுரிமை வழங்கவேண்டும். இன்று சட்டப்படி குடியுரிமை இருக்கிறது. ஆனால், காணி, கல்வி, வீட்டு, சுகாதார உரிமைகள் இந்நாட்டின் ஏனைய குடிமக்களுக்கு சமமாக எமது மக்களுக்கு இல்லை. ஆகவே, முழு குடியுரிமை இல்லை. இதற்காகவே நாம் ஜனநாயக ரீதியாக இலங்கைக்கு உள்ளே போராடுகிறோம். இதை இலங்கை அரசுக்கு ஞாபகப்படுத்தி பெற்றுத்தரவேண்டிய கடப்பாடு இந்திய அரசுக்கு இருக்கிறது.

எங்கள் மக்கள் எழுச்சியடைய முதல் தேவை, கல்வி எழுச்சியே. கணிதம், விஞ்ஞானம்,



ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களை இடைநிலை, க.பொ.த. சா/த, உ/த, வகுப்புகளில் எமது பிள்ளைகளுக்கு தமிழ்மொழியில் போதிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. இதற்காக உங்கள் நாட்டு ஆசிரியர்கள் இங்கே வந்து எமது பாடசாலைகளில் கற்பிப்பதை இந்நாட்டு ஆசிரிய தொழில் சட்டங்கள் ஏற்காது.

நமது ஆசிரிய பணி விண்ணப்பதாரிகளை நாம் இந்தியாவுக்கு அனுப்பமாட்டோம். ஆகவே ஒரே வழி, எமது மக்களுக்கான விசேட ஒதுக்கீட்டுத் திட்டத்தின் அடிப்படையில், இங்கே ஆசிரிய பயிற்சிகளை நடத்த கலாசாலை அமைத்து, அதற்கு தமிழகத்திலிருந்து கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் பாடங்களுக்கான ஆசிரிய பயிற்சிகளை வழங்க பயிற்சியாளர்களை அனுப்புவதாகும். இந்தத் திட்டத்தை உங்கள் அரசு உடன் செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இதற்கான உள்நாட்டு அனுமதிகளை, கட்டமைப்புகளை இலங்கை ஜனாதிபதியுடன் பேசி நாம் செய்து தருவோம் - என்றார்.

# ஜகார்த்தாவில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட இலங்கை வர்த்தகர் விவகாரம்

## விசாரணைக்காக இந்தோனேசியா செல்கிறது சிஐடி

இலங்கையைச் சேர்ந்த வர்த்தகர் இந்தோனேசியாவில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டமை குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக சிஐடியினர் இந்தோனேசியாவுக்கு செல்லத் தயாராக உள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த வர்த்தகர் ஓனேஸ் சுபசிங்கவின் மரணம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதைத் தொடர்ந்தே விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் ஆடம்பர தொடர்மாடியொன்றில் இலங்கையைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஓனேஸ் சுபசிங்க (வயது 45) சடலமாக மீட்கப்பட்டார்.

இதேவேளை, சுபசிங்கவின் கொலை இலங்கையில் திட்டமிடப்பட்டு இந்தோனேசியாவில் நிறைவேற்றப்பட்டதாகவும் உயிரிழந்தவரின் மனைவி மற்றும் அவரது நண்பி இதன் பின்னணியில் உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மா ஓயா ஆற்றில் பாய்ந்த மாணவர் மாயம்

## நீர்கொழும்பில் சம்பவம்

நீர்கொழும்பு, கொச்சிக்கடை தோப்புச் சந்தி பகுதியில் பாடசாலை மாணவர் ஒருவர் மா ஓயா ஆற்றில் பாய்ந்த நிலையில் காணாமல் போயுள்ளார்.

நேற்று (13) முற்பகல் குறித்த மாணவர் ஆற்றில் பாய்ந்துள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

மடபெல்ல, அகரகம பகுதியைச் சேர்ந்த 17 வயது மாணவர் ஒருவரே இவ்வாறு ஆற்றில் பாய்ந்துள்ளார்.

பிறிதொரு மாணவரின் மூன்று இலட்ச ரூபா பெறுமதியான கைபேசியை சேதப்படுத்தினார் என காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கான கட்டணத்தை தவணை முறையில் செலுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில், சேதப்படுத்திய கையடக்கத் தொலைபேசிக்கான தவணைக் கட்டணத்தை செலுத்த வீட்டிலிருந்து வெளியேறியதன் பின்னரே இவ்வாறு ஆற்றில் பாய்ந்துள்ளார்.

ஆற்றில் பாய்ந்த மாணவரை தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 13.02.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 135 4764 | 146 5784 |
| கனேடியன் டொலர் | 156 2534 | 167 5 06 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 63 8 | 43,7106 |
| யூரோ | 270 0652 | 285 33 5 |
| ஜப்பான் யென் | 1 6000 | 1 7073 |
| சிங்கப்பூர் டொலர் | 157 1 25 | 168 1077 |
| ஸ்ரேலிங் பவுன் | 320 340 | 336 1854 |
| சுவிஸ் பிரான்ங் | 274 62 0 | 3 1 4445 |
| ஐ.அ.டொலர் | 248 3587 | 258 8481 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 848 8252 |
| குவைட் | குவைட் தினார் | 0,072 4075 |
| ஓமான் | ஓமான் றியால் | 83 20 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 257 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 3302 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 4215 |

# இலங்கைப் பிரஜைகளுக்காக இந்திய அரசாங்கம் வழங்கும் புலமைப்பரிசில்கள்

கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் முழுமையான அனுசரணையுடன் வழங்கப்படும் 200இற்கும் அதிகமான புலமைப்பரிசில்களுக்கு பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மருத்துவம்/துணைமருத்துவம், நவநாகரீக வடிவமைப்பு மற்றும் சட்டத்துறை சார்ந்த கற்கைகள் தவிர்ந்த பல்வேறு துறைகளில் முன்னணி இந்திய நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வியைக் கற்பதற்காக இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இலங்கைப் பிரஜைகளுக்கென பிரத்தியேகமாக வழங்கப்படும் இப்புலமைப்பரிசில்கள் 2023-2024 கல்வி ஆண்டுக்கானது.

இந்தத் திட்டத்தின் கீழ் பின்வரும் கற்கை நெறிகளுக்காக புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன;

**a) நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டம்:**
பொறியியல், விஞ்ஞானம், வர்த்தகம், பொருளியல், வணிகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட அனைத்து பட்டப்படிப்பு/பட்டமேற்படிப்பு/முதுமாணி (Undergraduate/Post Graduate & PhD ) கற்கைநெறிகளை இந்தத் திட்டம் உள்ளடக்குகின்றது.

**b) மௌலானா ஆசாத் புலமைப் பரிசில் திட்டம்:**
பொறியியல், விஞ்ஞானம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் முதுமாணி பட்டப்படிப்புகள்.

**c) ராஜிவ் காந்தி புலமைப் பரிசில் திட்டம்:**
B.E அல்லது B.Tech பட்டப்படிப்புகளுக்கு வழியமைக்கும் 'தகவல் தொழில்நுட்பத் துறைகளிலான பட்டப்படிப்புக் கற்கைநெறிகள்.

அனைத்துப் புலமைப்பரிசில்களும் கற்கை நெறிகளின் முழுமையான காலத்திற்கும் கல்விக் கட்டணம், மாதாந்த அடிப்படைச் சலுகைக் கட்டணம் மற்றும் புத்தகங்கள் மற்றும் காகிதாதிகளுக்கான வருடாந்த கொடுப்பனவு என்பவற்றை உள்ளடக்குகின்றன.

ஏனைய பல்வேறு அனுகூலங்களுடன் இந்தியாவிலுள்ள அண்மித்த பயணச் சேரிடங்களுக்கான விமானக் கட்டணம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கல்விச் சுற்றுலாவுக்கான வருடாந்தக் கொடுப்பனவு என்பனவும் வழங்கப்படும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு குறித்த பல்கலைக்கழக வளாகத்தினுள் விடுதி வசதிகளும் வழங்கப்படும்.

இந்தப் புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளை இந்திய அரசாங்கம் தெரிவுசெய்கிறது. இந்தியாவிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு பட்டங்களுக்கான கற்கைகளைத் தொடர்வதற்கு தகுதிவாய்ந்தவந்தவர்களை தெரிவுசெய்யும் செயற்பாடுகள் இலங்கை கல்வி அமைச்சுடனான கலந்தாலோசனையில் மேற்கொள்ளப்படும்.

இவ்விடயம் தொடர்பாக தேவையான தகவல்களை கல்வி அமைச்சின் www.mohe.gov.lk எனும் இணையத்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்த கற்கை நெறிகளுக்கான தகைமை மற்றும் தெரிவுசெய்தல் நடைமுறை தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் இலங்கை கல்வி அமைச்சு அல்லது கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றை அணுகி தகவல்களைப் பெறமுடியும்.



அகில இலங்கை கிராமிய கலை ஒன்றியத்தின் 3ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு தெஹியோவிட்ட காயத்ரி தமிழ் பாடசாலையில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வின்போது புவக்பிட்டிய சீ.சீ.தமிழ் மகா வித்தியாலயத்துக்கு ஒருதொகை நூல்களை பாடசாலையின் உப அதிபர் சசிகுமாரிடம் புரவலர் புத்தகப் பூங்காவில் நிறுவுனர் புரவலர் ஹாசிம் உமர் வழங்கினார். (படப்பிடிப்பு - இன்பாஸ் சலாவுதீன்)

# பஸ் சாரதிக்கு திடீர் மாரடைப்பு: எதிர்பாராமல் இடம்பெற்ற விபத்து!

மின்னேரிய பஸ் நிலையத்திலிருந்து ஹிங்குரக்கொட நோக்கி நேற்று (13) காலை புறப்பட்ட பஸ் சாரதிக்கு ஏற்பட்ட திடீர் மாரடைப்பு காரணமாக எதிர்பாராதவிதமாக விபத்துக்குள்ளானது.

பஸ் சாரதி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். என்.கே.ஆரியரத்ன என்ற 75 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீதியில் சென்றுகொண்டிருந்த பஸ் சாரதிக்கு மாரடைப்பு ஏற்பட்டதால் திடீரென வீதியை விட்டு விலகி கடை ஒன்றின் மீது பஸ் மோதியுள்ளது. விபத்து நடந்த உடனேயே சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

# வீடொன்றை உடைத்து ரூ. 6 இலட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான தங்க நகை உட்பட பொருட்கள் திருட்டு

## மொனராகலையில் இரு இளைஞர்கள் கைது

(கெலும் குணதிலக்க)



மொனராகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குமார தொல பாறையில் அமைந்துள்ள வீடொன்றை உடைத்து தங்க நகைகள் உள்ளிட்ட பொருட்களைத் திருடிய சந்தேகநபர்கள் இருவர் மொனராகலை பொலிஸாரால் நேற்று (13) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீட்டின் ஜன்னலை உடைத்து, அங்கிருந்த சுமார் 06 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் உள்ளிட்ட பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட மொனராகலை பொலிஸார், மொனராகலை தொடம்வத்தை 25 ஏக்கர் பிரதேசத்தில் வசிக்கும் 37 வயதுடைய நபரையும் 24 வயதுடைய நபரையும் கைதுசெய்ததுடன், விசாரணையின்போது திருடப்பட்ட கைக்கடிகாரம் ஒன்றையும் மற்றும் தங்கத்தை அடகு வைத்ததற்கான ரசீது என்பவற்றையும் கண்டெடுத்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின்பேரில் உரிய தங்க நகைகளை பெறும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். சந்தேகநபர்களை மொனராகலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிற்றுக்கிழமை 2023.02.12

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5029
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,037,751.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 5 6 5 1 4 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3271
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 78,466,202.40
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 34 53 68 70

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1484
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,579,047.60
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 8 4 9 6 5 7


தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1059
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,370,266.80
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 26 27 61 65


ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 338
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,850,119.40
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 10 33 34 49
விசேட இலக்கினம் ரிஷபம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1377
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 299,799,918.00
ஆங்கில எழுத்து U
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 46 65 68 71
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# யாழில் நடைபெற்ற முத்திரைக் கண்காட்சி















(யாழ். நிருபர்)

அருண்பணிச்சபை மற்றும் புனித ஞானப்பிரகாசியார் மன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (12) முத்திரை மற்றும் நாணயக் கண்காட்சி இளவாலை சென் ஜேம்ஸ் தேவாலய மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் வாமணனது முத்திரைகள் மற்றும் நாணயங்களே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டன.

80 நாடுகளின் முத்திரைகள், 65 நாடுகளுக்கும் மேற்பட்ட நாணயக் குற்றிகள் மற்றும் நாணயத் தாள்கள் இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டன.

1996ஆம் ஆண்டிலிருந்து அவர் முத்திரைகள் மற்றும் நாணயங்களை சேகரிப்பதை தனது பொழுதுபோக்காக செய்து வருவதாக தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சி மூலம் மாணவர்களை தேவையற்ற இலத்திரனியல் உலகிலிருந்தும் அநாவசிய செயற்பாடுகளிலிருந்தும் சற்று விலக்கி பயனுள்ள பொழுதுபோக்கில் ஈடுபடுத்துவது நோக்கமாக உள்ளது.

இக்கண்காட்சியை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஆர்வத்துடன் பார்வையிட்டுள்ளனர்.

## புத்தூரில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

வீதியின் குறுக்காக இரும்புக்கூட்டை கொண்டு சென்றவர்களுடன் மோதுண்ட மோட்டார்சைக்கிளோட்டி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் அச்சுவேலி கதிரிப்பாய் பகுதியைச் சேர்ந்த விஜயரத்தினமூர்த்தி டுவிசன் (வயது 20) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை (06) அச்சுவேலியிலிருந்து தனது நண்பனுடன் கொடிகாமத்திற்கு சென்றுவிட்டு, சாவகச்சேரி - புத்தூர் வீதியூடாக மோட்டார்சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, வீதியின் குறுக்காக இரும்புக்கூட்டை கொண்டு சென்றவர்களுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானர்கள்.

விபத்தில் காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

## கைதடியில் நஞ்சருந்தி சிறுவன் உயிரிழப்பு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கைதடி கிழக்கு பகுதியைச் சேர்ந்த 14வயது சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் (12) இரவு நஞ்சருந்தி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவனின் தந்தை சிறுவனை கண்டித்த நிலையில் சிறுவன் இவ்வாறு நஞ்சருந்தி உயிரை மாய்த்திருப்பதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வருகிறது.

உயிரிழந்த சிறுவனின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. குறித்த சிறுவன் கைதடி பிரதேச பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







யாழ். மாவட்ட சிவன் ஆன்மீக சபையின் ஏற்பாட்டில் மகா சிவராத்திரியை முன்னிட்டு நேற்று முன்தினம் (12) அடியார்கள் திருக்கேதீஸ்வர பாதயாத்திரை, செல்வசந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு நேற்று நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து மன்னார் திருக்கேதீஸ்வரநாதரை நோக்கி மேற்கொள்ளப்பட்டது. யாழ். மாவட்ட சிவன் ஆன்மீக சபையின் தலைவர் சீத்தாராமன் சிவமைந்தன், செயலாளர் வ.வாகீசன் மற்றும் யாழ். அறநெறி பாடசாலையின் மாணவர்கள் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கணவனின் மறைவுச் செய்தியை கேட்டு உயிர்மாய்த்த மனைவி

**யாழில் துயரம்**

(யாழ். நிருபர்)

கணவன் உயிரிழந்த செய்தியைக் கேட்ட மனைவி தனது உயிரை மாய்த்துள்ளார். யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்கு தெருவைச் சேர்ந்த செல்வதயாளரூபன் நாகராணி (வயது 61) என்பவரே உயிரை மாய்த்துள்ளார். கடந்த சனிக்கிழமை (11) இவரது கணவரான செல்வதயாளரூபன் மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கணவனின் மரண செய்தியை தொலைபேசி ஊடாக கேட்ட மனைவி தனது உயிரை மாய்க்க முயன்ற நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார். வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (12) உயிரிழந்துள்ளார்.

## ஹட்டன் டிப்போவுக்கு ரூ.127 இலட்சம் வருமானம்

### மூன்று நாட்களில் கிடைக்கப்பெற்றதாக அதிகாரிகள் தகவல்

(மனூர சுதத் செல்லஹேவா)

சிவனொளிபாதமலைக்கு யாத்திரிகர்களின் வருகையில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக கடந்த வார இறுதியில் ஹட்டன் டிப்போவுக்கு 127 ரூபா வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அதன் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஜீ.ஜே.கே. கீர்த்திரத்ன தெரிவித்தார்.

அந்த அடிப்படையில் 10, 11, 12 ஆகிய திகதிகளில் முறையே 38 இலட்ச ரூபா, 43 இலட்ச ரூபா, 46 இலட்ச ரூபா என வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது. சிவனொளிபாதமலைக்கு பெரும் எண்ணிக்கையிலான யாத்திரிகர்களுக்கான விசேட போக்குவரத்து ஏற்பாடுகளை ஹட்டன் டிப்போ மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாகவே வருமானம் அதிகரித்ததாகவும் ஊழியர்களின் அர்ப்பணிப்பான சேவையும் இதற்குக் காரணம் எனவும் கீர்த்திரத்ன மேலும் தெரிவித்தார்.

## மலையக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாகக் குறைவு



(மஸ்கெலியா செய்தியாளர்)

மத்திய மலைநாட்டில் கடந்த சில நாட்களாக கடும் வெப்பம் நிலவிவருகிறது. இதனால் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீரை வழங்கும் பிரதான நீர்த்தேக்கமான மவுசாக்கலையில் நீர் மட்டம் நேற்று மதியம் வரை அதன் கொள்ளளவை விட சுமார் 19 அடி குறைந்த நிலையில் உள்ளது.

இந்த நீர்த்தேக்கம் மூலம் கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, நவலக்சபான ஆகிய நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீரை வழங்கும் பிரதான நீர்த்தேக்கம் இதுவாகும் என நீர் மின் நிலைய உயர் அதிகாரி தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், காசல்ரீ நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 21 அடி குறைந்த நிலையில் உள்ளது எனவும் மேலும் இந்த வரட்சி தொடருமானால் மின் வெட்டு ஏற்படும் அபாயத்தை இலங்கை வாழ் மக்கள் அனுபவிக்க நேரிடும் எனவும் அந்த அதிகாரி கூறினார்.



சமூகசேவகர் சந்திரனின் உதவியுடன் ஆக்ரா பிரிவு (வாழமலை) தோட்டத்துக்கு குடிநீர் தாங்கிக்குரிய நிதி உதவி அண்மையில் வழங்கிவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஆக்ரா தமிழ் வித்தியாலய அதிபர் விநாயகமூர்த்தி, கிராம சேவகர் குழந்தைவேல், ஊடகவியலாளர் புஷ்பராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

## பிள்ளைகளின் விடயத்தில் பெற்றோர் அவதானம் செலுத்த வேண்டும்

### மாருகொன பள்ளிவாசல் நிகழ்வில் கிராம உத்தியோகத்தர் குணவர்தன தெரிவிப்பு





(உக்குவளை செய்தியாளர்)

பெற்றோர் தம் பிள்ளைகள் விடயத்தில் போதிய அவதானம் செலுத்தாததன் விளைவே இன்று அவர்கள் வழிதவறக்காரணமாக அமைந்துள்ளது என்று உக்குவளை மாருகொன கிராம உத்தியோகத்தர் எஸ்.குணவர்தன தெரிவித்தார்.

மாருகொன ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் முஸ்லிம் கல்விப் பணிப்பாளர்கள், உலமாக்கள் பலரும் சமுகமளித்திருந்தனர். இந்நிகழ்வில், மாணவர்களுக்கு கல்வி மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றில் வழிகாட்டும் நிகழ்வின் போது அவர் கலந்துகொண்டு மேலும் உரையாற்றுகையில்,

நாம் கல்விகற்ற காலங்களில் பெற்றோர் ஆசான்களின் புத்திமதிகளின்படி எமது பணிகளைச் செய்தோம். வகுப்பில் ஏதும் நாம் குறைசெய்துவிட்டால் ஆசிரியர்கள் எம்மை உடன் தண்டிப்பதுண்டு. அதனை நாம் எமது பெற்றோரிடம் சொல்வதில்லை. சொன்னால் பெற்றோரும் நாம் குறைசெய்திருப்போம் என்பதையறிந்து தண்டிப்பார்கள் என்ற பயம்தான். எனவே, நாம் அவ்வாறு கற்றதன் பயனாகத்தான் இன்று ஒரு அரச அதிகாரியாகவிருந்து மக்களுக்குப் பணிசெய்யமுடிகிறது. இங்கு வருகைதந்துள்ள கல்விப் பணிப்பாளர்கள், உலமாக்களும் படித்தவர்கள்தான். இன்று ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டித்தால் அது மனித உரிமை மீறலாகக் கொள்ளப்படுகிறது.

மாணவர்களை நல்வழிப்படுத்தும் வகையில் கல்வி மற்றும் ஒழுக்க விடயங்களைக்கற்று கொடுப்பதில் நடத்தப்படும் இதுபோன்ற பணிகள் இன்றைய நிலைமைக்கு அவசியமாகும். எனவே, மாணவர்கள் இதன்மூலம் உச்சப் பயனைப் பெறல் வேண்டும்.

பெற்றோரும் தம் பிள்ளைகள் விடயத்தில் அவதானம் செலுத்தாததன் விளைவே அவர்கள் வழிதவறக் காரணமாகும். எனவே, மாணவர்களது கல்வி, ஒழுக்கம் போன்ற விவகாரங்களில் எப்போதும் அக்கறைசெலுத்தத் தவறக்கூடாது.

கல்விகற்ற ஆளுமைமிக்கவர்கள் இன்று சகல துறைகளுக்கும் தேவைப்படுவதால் மாணவர்கள் வீணான விடயங்களில் ஈடுபடாமல் கல்வி மற்றும் ஒழுக்க விடயங்களில் அதிக கரிசனை காட்டவேண்டும் என்றார். இங்கு தொடர்ந்து மாதம் நான்கு தடவைகள் மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சிகள் ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நிதி மோசடிசெய்த இருவர் கைது

(என். மலர்வேந்தன்)

வெளிநாட்டில் தொழில் பெற்றுத் தருவதாகக்கூறி நிதி மோசடி செய்த இரண்டு சந்தேகநபர்கள் பதுளை பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூன்று இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாக பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி, பதுளை பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் நேற்று முன்தினம் (12) அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் லுணுகலை பிரதேசத்தை சேர்ந்த 40, 42 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

## காசோலை மோசடியில் ஈடுபட்ட வேட்பாளர் கம்பளையில் கைது

(கலஹா செய்தியாளர்)

இம்முறை பிரதான அரசியல் கட்சி ஒன்றின் ஊடாக கம்பளை நகரசபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் உலருணவு மொத்த விநியோகஸ்தர்களை ஏமாற்றி பணமோசடியில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் கம்பளை நகரில் வைத்து மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

கம்பளை கஹாடப்பிட்டியைச் சேர்ந்த சந்தேக நபர் கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கம்பளை உட்பட மேலும் பல நகரங்களைச் சேர்ந்த வியாபாரிகளையும் ஏமாற்றி காசோலை மோசடியில் ஈடுபட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த உலருணவு மொத்த விநியோகஸ்தர் ஒருவருக்கு கொடுக்கவேண்டிய 21 இலட்ச ரூபா பணத்திற்கு போலி காசோலையினை கொடுத்து ஏமாற்றியமை தொடர்பாக ஏறாவூர் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமையவே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.





கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சமூக சேவையாளர்களையும் கலைஞர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு பல்லேகலை மல்லிகா வரவேற்பு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர் வே. சிதம்பரநாதன் உள்ளிட்டோர் கௌரவிக்கப்பட்டனர். (படம்: கண்டி செய்தியாளர்)

# 20 மில்லியன் ரூபா நிதி மோசடி; 46 பிடியாணைகள் பிறப்பிப்பு

## சந்தேகநபர் கைது

20 மில்லியனுக்கும் அதிகமான நிதி மோசடி தொடர்பில் தேடப்பட்டுவந்த பெண் ஒருவர் மிரிஹான குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கடவத்தையில் நேற்று முன்தினம் (12) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உணவுப் பொதிகள் தொடர்பில் சந்தேகநபர் செய்ததாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் நுகேகொட நீதவான் நீதிமன்றம் அவருக்கு எதிராக 46 பிடியாணைகளைப் பிறப்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சூரியகம பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய சந்தேகநபர் மிரிஹான பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# மிளகாய் உற்பத்தியை 25 சதவீதத்தால் அதிகரிக்க விவசாய அமைச்சு நடவடிக்கை



இவ்வருடம் உள்நாட்டு உலர் மிளகாய் உற்பத்தியை 25 வீதத்தால் அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட அதிகாரிகளுக்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கைக்குத் தேவையான மொத்த காய்ந்த மிளகாயின் அளவு 55 ஆயிரம் மெற்றிக் தொன் என்றாலும், அதில் 50 ஆயிரம் மெற்றிக் தொன் மிளகாய் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகவும், இலங்கையின் வருடாந்த மிளகாய் உற்பத்தி சுமார் 5000 மெற்றிக் தொன் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பதுளை கும்பல்வெலயில் மிளகாய் செய்கை வேலைத்திட்டத்தை அவதானிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# Job Vacancies

**Data Entry Operators**
Company: TR Associates
Email: mkncorporates@gmail.com

**Sales Executives**
Company: Eureka Australian Migration Experts
Email: careers.eureka@gmail.com

**Plant Manager**
Company: Adamjee Lukmanjee Group of Companies
Location: Kurunegala
Email: careers@adamjeelukmanjee.com

**Assistant Manager**
Company: Nrich Care
Email: info@nrichcares.com

**Web Application Developer**
Company: Ecom Services Lanka PVT Ltd
Email: careers@ecom.services

**Sales Executive**
Company: Fashion Market LK
Email: teamhr@aod.lk

**Accounts Executive**
Company: Simplebooks PVT Ltd.
Email: people@simplebooks.com

**Deputy Executive Director**
Institution: FPA Sri Lanka
Email: careers@fpasrilanka.org

**Field Officer**
Location: Kaluthara
Email: careers@lankacanneries.com

**Graphic Designer**
Company: Seren Scents PVT Ltd
Age Limit: 20-30 Years
Email: saleslk@serenscents.co.uk

**Content Writer**
Company: The CEO Sri Lanka
Email: hello@ceo.lk

**Content Writer / Communication Officer**
Company: Ecpat, Colombo
Email: ecpatlk@gmail.com

**Programme Co-ordinator**
Institution: IUCN Sri Lanka
Web: www.iucn.org

# தலதா மாளிகை தொடர்பில் வதந்திகளைப் பரப்புவோர் கைது

## பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை கடிதம்

தலதா மாளிகை மற்றும் மகாநாயக்கர்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் பதிவிடும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அஸ்கிரிய பீடாதிபதி வரகாகொட ஞானரதன தேரர், மல்வத்து பீடாதிபதி திப்பொடுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தெல ஆகியோர் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சில குழுக்கள் சமூக ஊடகங்கள் ஊடாக அடிப்படையற்ற மற்றும் தீங்கிழைக்கும் கருத்துகளைப் பரப்பி வருவதாக பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்படி, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் அனைவருக்கும் எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மொனராகலையில் பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை

## பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது

(கெலும் குணதிலக்க)

மொனராகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெஹெரகல பகுதியில் வசிக்கும் பெண்ணொருவரை கூரிய ஆயுதத்தால் குத்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை அட்டம்பிட்டிய பிரதேசத்தில் வைத்து மொனராகலை பொலிஸார் கைதுசெய்தனர்.

மொனராகலை வண்டிகும்புர வெஹெரகல பகுதியைச் சேர்ந்த கே.எம்.தயாவதி (45) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கணவரைப் பிரிந்து இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்துவந்த உயிரிழந்த பெண்ணுடன் கைதான பொலிஸ் கான்ஸ்டபிள் சுமார் 15 வருடங்களாக தொடர்பு வைத்திருந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணுக்கு வேறு நபருடன் தொடர்பு இருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் உயிரிழந்த பெண்ணுக்கும் இடையில் வாய்த்தகராறு ஏற்பட்டு, நேற்று முன்தினம் (12) இரவு கத்தியால் குத்திக் கொலை செய்ததுடன், அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இறந்த பெண்ணின் சகோதரர் ஒருவர் வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் முன் கதவுக்கு அருகில் இரத்தக் கறைகள் இருப்பதைக் கண்ட அவர், இது குறித்து பொலிஸ் அவசர அழைப்பு எண்ணுக்குத் தெரிவித்தார்.

அதனடிப்படையில், மொனராகலை பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண்டபோது நீர்க் குழாயின் அருகில் கத்தியால் குத்தி இறந்துகிடந்த பெண்ணின் சடலத்தைக் கண்டெடுத்துள்ளனர்.

இக்கொலை தொடர்பான விசாரணை மொனராகலை மாவட்ட நீதவான் திருமதி ஏ.எல்.சஜினி அமரவிக்கிரமவினால் மேற்கொள்ளப்பட்டது.

பிரேத பரிசோதனை இன்று (14) பதுளை பொது வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

# கரந்தெனியவில் கிணற்றில் வீழ்ந்து நான்கு வயது சிறுவன் உயிரிழப்பு

கரந்தெனிய மஹகொட பிரதேசத்தில் பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து நான்கு வயது சிறுவன் நேற்று முன்தினம் (12) உயிரிழந்துள்ளார்.

கரந்தெனிய மஹகொட பிரதேசத்தைச் சேர்ந்த பி.டி.மினோத் மன்சன என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுவனைக் காணவில்லை என பிரதேசவாசிகள் தேடிய வேளையில் கிணற்றின் அடிப்பகுதியை சோதனையிட்டபோது குழந்தையின் சடலம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.







மாவனெல்லை, திப்பிட்டிய, அரநாயக்கா ஆஸாத் மற்றும் மனித உரிமைகளுக்கான சமாதான தூதுவர்களின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வந்த மகளிருக்கான தையல் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் திப்பிட்டிய வில்பொலை அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.


# 22 மாடுகளை கடத்த முற்பட்ட அறுவர் பொலிஸாரால் கைது

(கெலும் குணதிலக்க)

தனமல்வில பிரதேசத்திலிருந்து கொழும்பு பகுதிக்கு லொறியில் ஏற்றி கடத்திச் செல்ல முற்பட்ட 16 எருமை மாடுகள், 06 மாடுகளுடன் நேற்று (13) சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

தனமல்வில – உடவலவ வீதியில் கோமாலிகம பிரதேசத்தில் வைத்து இவர்கள் மாடுகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# வவுனியா ஆதி விநாயகர் திருக்கோவில் திருக்கதவு திறப்பு விழாவும் இசை இறுவெட்டு வெளியீடும்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் ஆதி விநாயகர் திருக்கோவில் ஆலய திருக்கதவு திறப்பு விழாவும் ஆதி நாயகா இசை இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றன.

வவுனியா மாவட்டத்தில் உள்ள சிறப்புமிகு ஆலயங்களில் ஒன்றான வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் திருக்கோவில் ஆலயத்தின் வளர்ச்சிப் பாதையின் ஒரு கட்டமாக ஆலயத்திற்கான பிரதான திருக்கதவு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. விசேட அபிஷேக பூஜை நிகழ்வுகளைத் தொடர்ந்து ஆலய திருக்கதவு திறந்து வைக்கப்பட்டதுடன், ஆதி விநாயகப் பெருமான் உள் வீதி வலம் வந்து பக்த அடியார்களுக்கு அருள் பாலித்தார்.

அதனைத் தொடர்ந்து ஆதி விநாயகர் இசை இறுவெட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது. ஆலயத்தின் பிரதான குரு மயூரசர்மா குருக்களால் இசை இறுவெட்டு வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், அதனை ஆலய நிர்வாகத்தினர், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பக்த அடியார்கள் எனப் பலரும் பெற்றுக்கொண்டனர்.

# பிபில பகுதியில் 15 வயது மாணவியை வன்புணர்வுக்குட்படுத்தியவர் கைது

(மொனராகல நிருபர்)

பிபில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தியகோபால கரகஹவெல பிரதேசத்தில் வசிக்கும் 15 வயதுடைய பாடசாலை மாணவியை வன்புனர்வுக்குட்படுத்திய சம்பவம் தொடர்பில் 17 வயது இளைஞன் நேற்று (13) பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுமி கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் பயிற்சி வகுப்புக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது குறித்த இளைஞனால் காட்டுப்பகுதிக்கு இழுத்துச்செல்லப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளான மாணவி மருத்துவ பரிசோதனைக்காக பிபில ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரை பிபில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.







60ஆவது தேனும் பாலும் கலந்த சவசந்த கானங்கள் இசை நிகழ்வு கொழும்பு PUBLIC LIBRARY AUDITORIUM மண்டபத்தில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இலங்கை பொன்மனச் செம்மல் தாஜ்மஹானுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி, கலை தங்கம் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்.

(படங்கள் – மொஹமட் .நசார்)



# அடுத்தடுத்து இரு வெற்றிகளை பதிவுசெய்த இலங்கை மகளிர் அணி

எட்டாவது ஐ.சி.சி. மகளிர் இருபதுக்கு 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் கடந்த 10ஆம் திகதி முதல் நடைபெற்றுவரும் நிலையில், இலங்கை அணி தங்களது இரண்டாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் மகளிர் அணியை 7 விக்கெட்டுகளினால் வீழ்த்தி, அடுத்தடுத்து இரு வெற்றிகளுடன் புள்ளிப்பட்டியலில் ஆதிக்கம் செலுத்துகிறது.

முதல் போட்டியில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்கு எதிராக 3 ஓட்டங்களால் வெற்றியீட்டிய நிலையில், நேற்று முன்தினம் இரண்டாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை



எதிர்கொண்டது.

பங்களாதேஷால் நிர்ணயிக்கப்பட்ட 127 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 18.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்று இரண்டாவது வெற்றியை பதிவுசெய்தது. இலங்கை அணி தங்களது அடுத்த ஆட்டத்தில் நாளை மறுதினம் இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு அவுஸ்திரேலிய மகளிர் அணியை எதிர்கொள்கிறது.

மிகவும் பலம்பொருந்திய ஆஸி. மகளிர் அணியை வீழ்த்தினால் இலங்கை அணி அரையிறுதி சுற்றுக்குத் தகுதிபெறும் வாய்ப்பை நெருங்கிவிடும். குழு 'ஏ% பிரிவில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகளும், குழு 'பி% பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள் மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகளும் உள்ளன.

லீக் சுற்றுப் போட்டிகள் நிறைவில் ஒவ்வொரு குழுவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிப் போட்டியில் மோதும். சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.


தேசிய பெண்கள் கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்

Sri Lanka Cricket

Dialog


# பாகிஸ்தானை பந்தாடிய இந்திய மகளிர் அணி



2023 ஐ.சி.சி. மகளிர் இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் மிகவும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்ற இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இந்திய மகளிர் அணி பாகிஸ்தானை வீழ்த்தியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணியின் கெப்டன் பெட்டிங்கை தெரிவுசெய்தார். அதன்படி முதலில் பெட்டிங் செய்த பாகிஸ்தான் அணி இதனால் 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 149 ஓட்டங்கள் எடுத்தது. இதனைத் தொடர்ந்து 150 ஓட்டங்கள் என்ற இலக்குடன் விளையாடிய இந்திய அணி 19 ஓவர்களில் 151 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் யாழ். அணி வெற்றி






(யாழ் நிருபர்)

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை சிறப்பிக்கும் முகமாக யாழ்ப்பாணம் மற்றும் தம்புள்ளை மாவட்ட இளையோர் அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

குறித்த போட்டியை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார். இந்த ஆட்டத்தில் 11 ஓட்டங்களால் யாழ்ப்பாண அணி வெற்றிபெற்றது. போட்டியின் சிறந்த வீரராக யாழ்ப்பாண அணித் தலைவர் டிலக்சன் தெரிவுசெய்யப்பட்டார். நிகழ்வின் இறுதியில் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

இந்த விளையாட்டு நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அ.உமாமகேஸ்வரன், வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மூன்றாவது டெஸ்ட் இடமாற்றம்

சுற்றுலா ஆஸி. - இந்திய அணிகள் இடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இமாசல பிரதேச மாநிலம் தர்மசாலாவில் மார்ச் 1 முதல் 5 வரை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இந்த மைதானத்தின் அவுட்பீல்ட் விளையாடுவதற்கு உகந்தவாறு இல்லை. புல் இல்லாமல் திட்டுகளாகக் காணப்படும் அவுட் பீல்டை இன்னும் 16 நாட்களில் தயார்படுத்துவது கடினம்.

அத்துடன், அடுத்த சில நாட்களில் மழை பெய்வதற்கும் வாய்ப்புள்ளது. இதனடிப்படையில் இந்தப் போட்டி அதே திகதியில் இந்தூருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## சம்மாந்துறை அல்-ஹம்றா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி: சம்பியனானது சபா இல்லம்





(மாளிகைக்காடு நிருபர், ஐ.எல்.எம். நாஸிம்)

சம்மாந்துறை கல்வி வலய கமு/சது/அல்-ஹம்றா வித்தியாலயத்தின் வரலாற்றில் 25 வருடங்களின் பின்னர் இல்ல விளையாட்டுப்போட்டி, வித்தியாலயத்தின் அதிபர் ஏ. முகம்மது றிஸ்வான் தலைமையில் கடந்த வாரம் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சபா மற்றும் மர்வா என மாணவர்கள் இரு அணிகளாக பிரிந்து போட்டிகளில் பங்குகொண்டனர். போட்டியில் புள்ளிகள் அடிப்படையில் 300 புள்ளிகளைப் பெற்று சபா இல்லம் (பச்சை இல்லம்) வெற்றிவாய்ப்பை தனதாக்கிக்கொண்டது. இதில் மர்வா (மஞ்சள் இல்லம்) 267 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தை தனதாக்கிக்கொண்டது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம். எம்.எஸ்.உமர் மௌலானா கலந்து சிறப்பித்தார்.

# நீரில் மூழ்கிய மாணவர்களை காப்பாற்றச் சென்றபோதே மரணங்கள் இடம்பெற்றன

### கொக்கட்டிச்சோலை நால்வர் மரணம் குறித்து புதிய தகவல் வெளியானது



(மண்டூர் செய்தியாளர்)

கொக்கட்டிச்சோலை பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்த தனியார் கல்விநிலைய ஆசிரியர் உட்பட நால்வர் உயிரிழந்த சம்பவத்தில், நீரில் மூழ்கிய மாணவர்களை காப்பாற்றச்சென்றபோது ஆசிரியர் உட்பட நால்வரும் உயிரிழந்திருப்பதாக புதிய தகவல் வெளியாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம், கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாந்தாமலை மீனாட்சி குளத்தில் நீரில் மூழ்கி நால்வர் பலியான சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (12) மாலை இடம்பெற்றுள்ளது.

பிரதான வீதி, களுமுந்தன்வெளி பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் கல்வி நிலைய ஆசிரியரான கோணேஸ்வரன் கிபேதன் (வயது 27) மற்றும் மாணவர்களான சத்தியசீலன் டனுஜன் (வயது 16), வீரசிங்கம் விதுஜன் (வயது 16), தயாபரன் ரஜீர்தரன் (வயது 16) ஆகியோரே இவ்வாறு நீரில் மூழ்கி சடலமாக மீட்கப்பட்டவர்களாவர்.



குறித்த மாணவர்கள் அனைவரும் களுமுந்தன்வெளி பாடசாலையில் க.பொ.த. சா/தர வகுப்பில் கல்வி கற்று வருவதாகவும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாகையால் பதினொரு மாணவர்களும் மூன்று ஆசிரியர்களும் மீனாட்சியர் குளத்தைப் பார்ப்பதற்கு சென்று அங்கு சமைத்து உணவருந்திய பின்னர் சமையல் பாத்திரங்களை குளக்கரையில் சுத்தம் செய்து கொண்டிருந்தவேளை, மூன்று மாணவர்கள் அருகிலிருந்த வள்ளத்தில் ஏறி குளத்தினுள் சென்றபோது வள்ளத்தினுள் அதிகமான நீர் உட்புகுந்ததினால் வள்ளம் நீரில் மூழ்கியதனை அவதானித்த ஆசிரியர், மாணவர்களை காப்பாற்றச் சென்றபோது நால்வரும் நீரில் மூழ்கி பலியானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்றபதில்நீதவான்வி.தியாகேஸ்வரனின் உத்தரவிற்கமைய சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல் கண்காணிப்புக் குழு திருகோணமலைக்கு விஜயம்



(கிண்ணியா செய்தியாளர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கண்காணிக்கும் முகமாக பெப்ரல் (PAFFREL) அமைப்பின் தேசிய இணைப்பாளர் சுஜீவ கயனத் மற்றும் திருகோணமலை எஹெட் கரிட்டாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை டாக்டர் போல் ரொபின்சன் அடிகளாருக்கும் இடையிலான சந்திப்பொன்று ஞாயிற்றுக்கிழமை (12) மாலை 2.00 மணியளவில் எஹெட் கரிட்டாஸ் நிறுவனத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் காலங்களில் சுயாதீனமாக தேர்தலை கண்காணிக்கும் முகமாக மாவட்ட மட்டத்தில் புதிய தேர்தல் கண்காணிப்பு உறுப்பினர்களை தெரிவுசெய்யும் பொறுப்பு மற்றும் வன்முறைகளில் ஈடுபடுபவர்களை கண்காணித்து அதனை அறிக்கைப்படுத்தும் பொறுப்புகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

மேலும், எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் போட்டியாளர்களை எவ்வாறு பொதுமக்கள் தெரிவுசெய்ய வேண்டும், தமது வாக்குகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் எனவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன், தேர்தல் கண்காணிப்பு தொடர்பான வழிகாட்டல் கைநூலும் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்

easthamilan@gmail.com

## ஹெரோயினுடன் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மத்திய வீதியில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின்படி, பொலிஸ் பரிசோதகர் வசந்த குமார தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 25 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் திங்கட்கிழமை(13)ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



காத்தான்குடி தள வைத்தியசாலையின் இரத்த வங்கி ஏற்பாடுசெய்த இரத்ததான நிகழ்வு சனிக்கிழமை (11) காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.துமிந்த நயனசிறி தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு இரத்த தானம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (காத்தான்குடி செய்தியாளர்)

## தண்டப்பணம் விதிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)


அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாகாம வீதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றிவந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். கைப்பற்றப்பட்டிருந்த வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் திங்கட்கிழமை(13) ஆஜர்படுத்தியபோது 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

வாகன உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது.

# வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் பற்றிய வியாழேந்திரனின் கருத்துக்குக் கண்டனம்

## காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் அறிக்கை


காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்
FEDERATION OF KATTANKUDY MOSQUES AND MUSLIM INSTITUTIONS
No. 01, Methappalli Road, Kattankudy - 03, Sri Lanka.
2022.02.12

(காத்தான்குடி செய்தியாளர்)

நமது நாட்டில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் பல்வேறு வகையான துன்பங்களையும் இன்னல்களையும் அனுபவித்தமையை இலங்கை வாழ் மக்கள் அனைவரும் அறிவார்கள். யுத்தத்தினால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட முஸ்லிம்களது இழப்புகளை அறிந்தும் அதனை வேண்டுமென்றே மறைத்தும் இனவாதக் குழுக்களின் பின்னால் மறைந்துகொண்டு தனது தேர்தல் பிரசாரத்தை தமிழ் முற்போக்குக் கழகத் தலைவர் வியாழேந்திரன் ஆரம்பித்திருக்கிறார் - என தமிழ் முற்போக்குக் கழகத் தலைவர் வியாழேந்திரனின் கருத்தை முற்றாகக் கண்டித்து காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில், அநியாயம் இழைக்கப்பட்ட ஒரு சமூகத்தின் பின்னால் இருக்கின்ற வேதனைகளையும் வலிகளையும் புரிந்துகொள்கின்ற மனோநிலையில் வியாழேந்திரன் இல்லை என்பதும் இன்னும் ஒரு மனவேதனையான விடயமாகும். வளமான நமது தேசம் இவரைப் போன்ற இனவாதிகளின் விஷமப் பிரசாரத்தினால்தான் சீரழிந்து போயிருக்கிறது என்பதே உண்மையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த வருடங்களில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களுக்குப் பாரியளவில் காணிப் பிரச்சினை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அதேநேரம், அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டும் சில அரச அதிகாரிகளின் கரிசனையின்மையால் அவை இன்னும் தீர்க்கப்படவில்லை என்பதுதான் யதார்த்தம். உதாரணமாக, மண்முனைப்பற்று பிரதேசத்தில் முஸ்லிம்கள் பரம்பரையாக வாழ்ந்து அவர்களுக்குச் சொந்தமான 48 ஏக்கர் காணி இதுவரையில் அவர்களுக்கு விடுவித்துக் கொடுக்கப்படவில்லை என்பதையும் வியாழேந்திரன் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வளவுகாலமும் இனவாத அரசுகளோடு ஒட்டி உறவாடி இருந்துவிட்டு இப்போது மக்கள் அந்த இனவாத ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்பியிருக்கின்ற நிலையில் தனக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் அதிகாரம் ஒன்று இல்லாமல் போகும் என்ற அச்சம் அவருக்குப் பீடித்திருக்கிறது. இதுபோன்ற இனங்களுக்கிடையில் குரோதத்தை தோற்றுவிக்கின்ற கருத்துகளை பொதுவெளியில் தெரிவிப்பதை வியாழேந்திரன் முற்றாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

இரண்டாவதாக, ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் இருந்து யார் செயற்பட்டார்கள் என்பது மிகத் தெளிவாக தற்போது வெளிவந்திருக் கின்ற நிலையில் வெறுமனே சஹ்ரானோடு தொடர்பில்லாத ஒரு பள்ளிவாசலை அரசாங்கம் தனது தேவைக்காக பயன்படுத்துவதற்கு முயற்சிக்கின்ற நிலையில், அதனை காத்தான்குடி சமூகம் மீண்டும் எங்களுக்குத் தர வேண்டும் என்று கேட்பதில் வியாழேந்திரனுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறோம்.

தமிழ் மக்களுக்கு வழங்கப்படுகின்ற தீர்வுத் திட்டத்திற்கு முஸ்லிம்கள் எப்போதும் தடையாக இருக்க மாட்டார்கள் என்கின்ற அதேநேரம், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய தீர்வாக அது இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

எனவே, வியாழேந்திரன் வேண்டுவது போன்று கண்டிப்பாக கிழக்கு மாகாண மக்களின் காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. காணிப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்பட்டு தீர்வு காணப்பட வேண்டும்.

இவ்வாறான நிலையில்தான் முஸ்லிம்களுக்கு சரியான தீர்வு கிடைக்கும் என்பதில் நாங்கள் மிக உறுதியாக இருக்கிறோம். இறுதியாக, இவ்விடயம் சம்பந்தமாக எந்த இடத்திலும் எந்த கலந்துரையாடலிலும் பங்குகொள்வதற்கும் நாம் தயாராக இருக்கிறோம் என்பதையும் இவ்விடத்தில் சொல்லிவைக்க விரும்புகிறோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சகல நட்டங்களும் பொதுமக்கள் தலையில்: வேடிக்கை பார்க்கிறது அரசு!

## - இம்ரான் எம்.பி.தெரிவிப்பு



(கந்தளாய், கிண்ணியா செய்தியாளர்கள்)

நாட்டின் தற்போதைய நிலைக்குக் காரணமானவர்கள் மிகவும் சந்தோஷமாகவும் தைரியமாகவும் நடமாடி வருகின்றார்கள். அவர்களுக்கெதிராக எந்த நடவடிக்கையும் இதுவரையும் எடுக்கப்படவில்லை. ஆனால், அவர்களால் உருவாக்கப்பட்ட சகல நட்டங்களையும் இழப்புகளையும் பொதுமக்கள் தலையில் கட்டி இந்த அரசாங்கம் வேடிக்கை பார்க்கிறது - என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் சனிக்கிழமை (11) இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ராஜபக்ஷக்கள் ஆட்சி பீடமேறியதுமுதல் நாட்டில் கமிசன் செயற்பாடுகள் அதிகரித்தன. ஊழல் உச்சக்கட்டத்தில் இருந்தது. பொருத்தமற்ற பொருளாதார நடைமுறைகளை அவர்கள் பின்பற்றினர். இதனால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தது. பொருட்களின் விலை 300 முதல் 500 வீதம் வரை அதிகரித்தன. இன்றும் அதிகரித்து வருகின்றன. எனினும், வருமானத்தில் எந்த அதிகரிப்பும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் பொதுமக்கள் சொல்ல முடியாதளவு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

ராஜபக்ஷக்கள் காலத்தில் இடம்பெற்ற பல மோசடிகளும் அதனால் ஏற்பட்ட பாரிய நிதி இழப்புகளும் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள சகலரும் இவற்றை விளங்கியிருக்கின்றனர். எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் இது வரை எடுக்கவில்லை. பொதுமக்கள் எப்படி கஷ்டங்களை அனுபவித்தாலும் பரவாயில்லை ராஜபக்ஷக்களைப் பாதுகாப்பதே தனது கடமை என்ற அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றார்.

இந்த விடயங்களை பொதுமக்களுக்கு மீள நினைவுபடுத்த விரும்பு கின்றேன். நாட்டை பிச்சைக்கார நாடாக்கிய மொட்டு கட்சியினருக்கும் அவர்களுக்குத் துணை போனவர்களுக்கும் நமது பொன்னான வாக்குகளை அளிக்கலாமா என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல் இவ்வளவு அநியாயங்கள் செய்தவர்களைப் பாதுகாத்து தமது சுகபோகத்தை மட்டும் கவனத்திற்கொண்டு செயற்பட்டுவரும் யானை கட்சியினருக்கும் அவர்களோடு சேர்ந்தவர்களுக்கும் வாக்களிக்கலாமா எனக் கேட்க விரும்புகின்றேன். இறைவனால் நமக்கு சிந்திக்கும் ஆற்றல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அனைவரும் சிந்திப்போம். ஊழல்வாதிகளுக்கும் அவர்களுக்குத் துணை போனவர்களுக்கும் இந்தத் தேர்தல் மூலம் நல்ல பாடம் படிப்பிப்போம் - என்றார்.

# நாவலடியில் கௌரவிப்பு நிகழ்வு



(மீராவோடை செய்தியாளர்)

வாழைச்சேனை மத்தி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நாவலடியில் இயங்கிவரும் அந்-நூர் அகடமியின் கௌரவிப்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (12) இடம்பெற்றது. அகடமியின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ.ஹபீப் காஸிமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அந்-நூர் அகடமியில் கல்வி கற்று சட்டக் கல்லூரிக்குத் தெரிவுசெய்யப்பட்ட இரு மாணவர்களும், கடந்த ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களும் மற்றும் கற்பித்த ஆசிரியர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், அதிதிகளாக கிழக்கு மாகாண தொழில் ஆணையாளர் ஏ.தாஹிர், ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர், ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.அஜ்மீர், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத், கந்தளாய் வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.மர்சூக், வாழைச்சேனை மத்தி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.பீர் முகம்மத் காஸிமி, அகடமியின் நிர்வாகத்தினர், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஆசிரியர் நியமனம் பெற்றுத்தருவதாகக்கூறி 8 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா மோசடி

## கல்முனை பகுதியில் சம்பவம்; நால்வர் கைது

(பாறுக் ஷிஹான்)

நடன ஆசிரியர் நியமனம் ஒன்றை பெற்றுத்தருவதாகக் கூறி பல இலட்ச ரூபாவை வங்கி ஊடாக மோசடி செய்த குழுவினரை கல்முனை தலைமையகப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை (09) கல்முனை பகுதியைச் சேர்ந்த பொன்னம்பலம் கணேசன் என்பவரால் பதிவுசெய்யப்பட்ட முறைப்பாட்டில், நடன ஆசிரியர் நியமனம் ஒன்றைப் பெறுவதற்கு கடந்த திங்கட்கிழமை (06) ஒரே நாளில் கட்டங்கட்டமாக முறையே 6 இலட்சம், ஒரு இலட்சத்து 20 ஆயிரம், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் என 8 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை வங்கி ஊடாக ஒருவருக்கு வைப்பு செய்த நிலையில் ஏமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனத்தை தனது மகனுக்கு பெற்றுக்கொடுப்பதற்காகவே குறிப்பிட்ட பணத்தொகைகளை வழங்கியதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்தியாவில் தனது மகன் நடன பாடத்தில் பட்டத்தை நிறைவு செய்திருந்த நிலையில், இந்த நியமனத்தைப் பெற முயற்சித்திருந்ததாகவும் கல்வியமைச்சில் உள்ள பதவிநிலை உயர் அதிகாரியின் பெயரைப் பயன்படுத்தி இந்த மோசடி இடம்பெற்றுள்ளதை பின்னர் அறிந்துள்ளதாகவும் அம்முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக்கவின் வழிநடத்தலில் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையில் கல்முனை குற்றப்புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 04 சந்தேக நபர்களை பொலிஸ் விசேட பிரிவின் தகவல் ஒருங்கிணைப்பிற்கமைய கைது செய்துள்ளனர்.

இந்நடவடிக்கையில் இரு பெண்களும், இரு ஆண்களுமாக நால்வர் பொலிஸாரால் திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளிலிருந்து கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் விசாரணைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விசாரணையின்போது கைதானவர்களின் வாக்குமூலத்தின்படி, சிறைச்சாலை ஒன்றில் சிறைவாசம் அனுபவிக்கின்ற நபர் ஒருவரின் தொடர்பின் பின்விளைவாக இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறையில் உள்ளவரே தம்மை வழிநடத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் கைதான பெண் சந்தேக நபரின் வங்கிக் கணக்கில் தொடர்ச்சியாக அதிகளவான பணக்கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்று வந்துள்ளதையும் பொலிஸார் விசாரணையில் கண்டறிந்துள்ளனர்.

அத்துடன், நடன ஆசிரியர் நியமனத்திற்காக மற்றுமொரு பெண் சந்தேக நபரின் வங்கிக் கணக்கு இலக்கத்திற்கும் ஏனைய சந்தேக நபர்களது வங்கிக் கணக்கு இலக்கத்திற்கும் ஒரேநாளில் 08 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த மோசடி கல்வியமைச்சில் உள்ள அதிகாரிஒருவரது பெயரை குறிப்பிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அவரும் பொலிஸ் நிலையத்திற்கு வாக்குமூலம் ஒன்றினை வழங்குவதற்காக அழைக்கப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த அதிகாரியும் ஏற்கனவே தனது பெயரில் இவ்வாறு மோசடி இடம்பெற்று வருவதாகக் கூறி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு வழங்கியிருப்பதாக பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

இம்மோசடியில் கைதான அனைத்து சந்தேக நபர்களையும் ஞாயிற்றுக்கிழமை (12) கல்முனை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் இவ்வாறான செயற்பாடுகளைப்போன்று ஏதேனும் முறைப்பாடுகள் உள்ளனவா என்றும் இவ்வாறான குழுக்களை உருவாக்கி சிறையில் இருந்து வழிநடத்தும் நபர்கள் தொடர்பிலும் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி பயனாளி ஒருவருக்கு வீட்டு லொத்தர் சீட்டிழுப்பு மூலம் 2 இலட்ச ரூபா கிடைக்கப்பெற்றது. அதற்கான காசோலையை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர் வழங்கிவைத்தார். (திராய்க்கேணி செய்தியாளர்)

# இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்து ஒருவர் உயிரிழப்பு

## புலியடிச்சோலை பகுதியில் சம்பவம்: 26 வயதான சந்தேக நபர் கைது




(மூதூர் செய்தியாளர்)

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கங்குவேலி - புலியடிச்சோலை பகுதியில் இருவருக்கிடையில் ஞாயிற்றுக்கிழமை (12) மாலை ஏற்பட்ட கைகலப்பு சம்பவத்தில் தடியொன்றினால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் கங்குவேலி, புலியடிச்சோலை பகுதியைச் சேர்ந்த கோகுலராசா (வயது - 48) என்பவரே உயிரிழந்துள்ளார். அத்தோடு குறித்த நபரைத் தாக்கி கொலை செய்த 26 வயதுடைய சந்தேக நபரொருவரையும் மூதூர் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இருவருக்கிடையில் ஏற்பட்ட தனிப்பட்ட வாய்த்தர்க்கம் பின்பு கைகலப்பாக மாறியதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைகலப்பு சம்பவம் இடம்பெற்ற இடத்திற்குச் சென்ற மூதூர் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஆர்.டபிள்யூ. நதீஷா மதுவந்தி திங்கட்கிழமை (13) காலை பார்வையிட்டு விசாரணை செய்ததுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com


## போடியார் புலம்பல்!



**இலங்கையில் வாழமுடியாட்டி லண்டனுக்கு யாழ்.எம்.பி. விக்கினேஸ்வரன் ஓடவேண்டுமாம் எண்டு முள்ளிவாய்க்காலில கொள்ளிவைத்த சரத் பொன்சேகா சொல்லிப்போட்டாரு எலுவா? இலங்கயில வாழமுடியாமத்தாண்டா நீ செய்த இனப்படுகொலைக்கு பயந்து பத்து லட்சம் தமிழர்கள் புலம்பெயர்ந்து லண்டன், கனடா, அவுஸ்ரேலியா, சுவிஸ் எல்லாம் வாழுறாங்க. விக்கியரு இலங்கையில வாழோணும் எண்டுதான் 2013இல் முதலமைச்சராகி இனப்படுகொலயாளி மகிந்தட ஊட்டபோய் சத்தியப்பிரமாணம் எடுத்தவர்..! அவருக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்.**

# எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்த ஊடகரின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

(வெல்லாவெளி செய்தியாளர்)



எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்த ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் நினைவுதினம் திங்கட்கிழமை (13) காலை 9.30 மணியளவில் காந்தி பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபியில் இடம்பெற்றது.

கடந்த 12.02.2009 வடக்கில் நடைபெற்ற இறுதிச்சமரில் எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்த ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்திக்கு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் நினைவு தினம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், மதத் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது உயிரிழந்த ஊடகவியலாளரின் உருவப்படத்திற்கு மலர்தூவி, சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தப்பட்டது.

நாட்டிலே படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு இதுவரையும் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் நீதி பெற்றுக் கொடுக்கவில்லை என்பது உலகறிந்த உண்மையாகும்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் கொலைக்குரிய சந்தேக நபர்களை இதுவரையும் சட்டத்தின் முன் நிறுத்தவில்லை என்பது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் புதிரான புதிராக காணப்படுவதாக ஊடகவியலாளர்கள் கவலை தெரிவித்தனர்.



# பீதியில் துருக்கி - சிரியா: மீண்டும் 4.7 ரிச்டரில் அதிர்வு!

## 40 ஆயிரத்தை அண்மித்த உயிரிழப்புகள்: 9ஆவது நாளாகவும் தொடரும் மீட்பு

துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 40 ஆயிரத்தை அண்மித்துள்ளது. இன்று 9ஆவது நாளாகவும் மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், நிலநடுக்கத்தால் நிலைகுலைந்து போயுள்ள துருக்கியின் கஹ்ராமன்மராஸ் (Kahramanmaras) பகுதியில் நேற்று (13) மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்நிலநடுக்கம் 4.7 ரிச்டர் அளவில் பதிவானது என அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது. இதனால் மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்.

துருக்கி மற்றும் சிரியாவில் வாட்டி வதைக்கும் கடும் குளிர் மற்றும் பனிப்பொழிவுக்கு மத்தியில் மீட்புப் பணிகள் தொடரும் நிலையில், கட்டட இடிபாடுகளை தோண்டத் தோண்ட தெய்வாதீனமாக உயிர் பிழைத்த பச்சிளம் குழந்தைகள்முதல் முதியோர்வரை காயங்களுடன் மீட்கப்பட்டுவரும் அதேவேளை, அதிகளவான சடலங்களும் மீட்கப்பட்டு வருகின்றன. இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

நிலநடுக்கம் ஏற்பட்டு 150 மணி நேரத்துக்குப் பிறகும் இடிபாடுகளில் சிக்கியவர்கள் சிலர் உயிருடன் மீட்கப்பட்டு வருவது மீட்புக் குழுவினரை உற்சாகமடைய வைத்துள்ளது.

இந்நிலையில், துருக்கி, சிரியாவில் நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 39 ஆயிரத்தைக் கடந்துள்ளது. துருக்கியில் 33 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன் 80ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இதேவேளை, சிரியாவில் 5,000இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பலியாவோரின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை எட்டக்கூடும் என ஐ.நா. அச்சம் தெரிவித்துள்ளது.

மேலும் நிலநடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றாமல் கட்டடங்களை நிர்மாணித்த மற்றும் அவர்களுக்குத் துணைபோன அதிகாரிகள் உட்பட 113 பேரை கைதுசெய்ய துருக்கி அரசு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, நிலநடுக்கத்தை சாதகமாக்கி திருட்டு, மோசடி ஆகியவற்றில் ஈடுபட்ட 48 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### தவிக்கும் சிரியாவுக்கு நீளுமா உதவிக்கரம்?

மேற்குலக பொருளாதாரத் தடை, உள்நாட்டுப் போர், போதிய மருத்துவக் கட்டமைப்பு வசதியில்லாத சிரியாவின் நிலை மிக மோசமாகவுள்ளதால் அங்குள்ள மக்கள் இந்நிலநடுக்கத்தால் கடும் பாதிப்புகளை சந்தித்துள்ளனர்.

ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவிற்கு நிவாரணப் பொருட்களை கொண்டுசேர்ப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதை கவலையுடன் ஒப்புக்கொண்டுள்ள ஐ.நா. சபை, இந்நிலநடுக்கத்தால் உயிரிழப்பு 70 ஆயிரத்தையும் கூட கடக்கலாம் என்று அச்சம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், துருக்கியில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) கர்ப்பிணிப் பெண், சிறு குழந்தைகள் எனப் பலரும் 6 நாட்களுக்குப் பின்னர் உயிருடன் மீட்கப்பட்ட சம்பவம் சிறிய ஆறுதலாக அமைந்துள்ளது. ஆனால், நாட்கள் செல்லச்செல்ல மக்களின் துக்கம் அரசின் மீதான கோபமாக - ஆவேசமாக மாறி வருகிறது. சிரியாவிலும் இதே நிலைதான் நிலவுகிறது.



சிரியாவின் வடமேற்குப் பகுதிக்கு ஐ.நா. குழு ஒன்று நிவாரணப் பொருட்களை அனுப்பியுள்ளது. துருக்கி வழியாக சிரியாவை இந்த நிவாரணப் பொருட்கள் அடைந்தது. ஆனால், அந்நாட்டு ஜனாதிபதி பஷார் அல்-அசாத்துக்கு எதிராக உள்ளூர் கிளர்ச்சியாளர்கள் மோதலில் ஈடுபட்டுள்ளதால் பல ஆண்டுகளாகவே சிரியாவின் சுகாதார கட்டமைப்பு மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், இதுபோன்ற மிகப்பெரிய இயற்கைப் பேரிடரை எதிர்கொள்ளுமளவுக்கு அதன் சுகாதார கட்டமைப்பு இல்லை. இது ஒருபுறமிருக்க, சிரியா மீது பல்வேறு மேற்கத்தேய நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. உள்நாட்டுப் போர், பொருளாதாரத் தடைகள், நிலநடுக்கம் என்று அடுக்கடுக்கான துயரங்களால் சிரிய மக்கள் வேதனையில் வெந்து இப்போது வெகுண்டெழுந்துள்ளனர். பெருந்துயருக்கு இடையே தாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அம்மக்கள் குமுறுகின்றனர்.

பொப் அல்-ஹவா எல்லை வழியாக வடமேற்கு சிரியாவிற்கு 10 ட்ரெக்குகளில் ப்ளாஸ்டிக் ஷீட்டுகள், கயிறுகள், ஸ்க்ரூ, ஆணி, போர்வை, மெத்தை, விரிப்புகள் போன்ற தற்காலிக கூடாரங்களுக்குத் தேவையான பொருட்கள் கொண்டுசெல்லப்பட்டன. ஆனால், இவை மட்டும் போதாது எனக் கூறுகின்றனர் களப் பணியாளர்கள். ஆயிரக்கணக்கான கட்டடங்கள் அங்கு தரைமட்டமாகியுள்ளன. முன்னதாக நேற்றுமுன்தினம் சிரியாவுக்கு ஐக்கிய அரபு இராச்சியம் பல மில்லியன் டொலர் நிதியும், நிவாரணப் பொருட்களும் அறிவித்துள்ளது. இதற்காக ஐக்கிய அரபு இராச்சிய அரசுக்கு ஜனாதிபதி அசாத் நன்றி தெரிவித்துள்ளார். சிரியாவுக்கு உலக நாடுகள் தாராளமாக உதவிசெய்ய வேண்டும் என்பதுதான் அந்நாட்டு மக்களின் ஏக்கமாகவும் ஐ.நாவின் வலியுறுத்தலாகவும் உள்ளது. தற்போது #SyriaNeedsHelp என்ற ஹேஷ்டேக் ட்விட்டரில் ட்ரெண்டாகி வருகிறது.



சிரியாவுக்கு நேரடியாகச் சென்ற உலக சுகாதார நிறுவனத் தலைவர் டெட்ரோஸ் அதோனம் கெப்ரியாஸஸ், ''சிரியாவில் உள்நாட்டுப் போர், கொரோனா, கொலரா, பொருளாதார நெருக்கடியுடன் இப்போது இந்தப் பூகம்பமும் சேர்ந்துள்ளது. சிரியா மீண்டெழ இன்னும் அதிகமான உதவிகள் தேவை'' - என்றார்.

இவை ஒருபுறம் இருக்க, துருக்கி, சிரியாவில் சுமார் 8 இலட்சத்து 70 ஆயிரம் மக்கள் போதிய போசாக்கான, சூடான உணவுக்காக காத்திருக்கின்றனர். மேலும், சிரியாவில் இங்கு 50 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வீடற்றவர்களாக மாறியுள்ளனர். இது தவிர, 2.6 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நிலநடுக்கத்தால் வைத்தியசாலைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. மற்றொருபுறம் தேடுதல் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களிடம் போதுமான கருவிகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை சிரியாவுக்கு நிவாரணப்பொருட்கள் மற்றும் பேரிடர் மீட்புப் படைகளை தாங்கியவாறு சுமார் 62 விமானங்கள் தரையிறங்கியுள்ளதாக அந்நாட்டு போக்குவரத்துத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இனிவரும் காலங்களில் அரபு நாடுகளிலிருந்து மேலும் சில விமானங்களில் உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



மீட்புப் பணியில் ஈடுபட்டு இன்னலுற்ற உயிர்களைக் காப்பாற்றிய நண்பனை (நாய்) முத்தமிட்டு நன்றி தெரிவித்த இமாம்....

### 6 வயது சிறுமியை மீட்ட ரோமியோ - ஜூலி

துருக்கியில் கட்டட இடிபாடுகளுக் கிடையே சிக்கியிருந்த 6 வயது சிறுமியை இந்தியாவிலிருந்து கொண்டுசெல்லப்பட்ட ரோமியோ - ஜூலி என்ற மோப்பநாய்கள் காப்பாற்றியுள்ளன. இதனையடுத்து ரோமியோ - ஜூலிக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளுக்காக சென்றுள்ள இந்திய மீட்புக் குழுவினருடன், தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த ஜூலி மற்றும் ரோமியோ மோப்பநாய்களும் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இரு மோப்பநாய்களும் நூர்தாகியில் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியிருந்த 6 வயது சிறுமியை காப்பாற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கி மற்றும் சிரியாவில் கடந்த 6ஆம் திகதி அதிகாலை (உள்ளூர் நேரப்படி)



ரோமியோ - ஜூலி

4.17 மணியளவில் 7.8 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியதில் பீதியடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்தனர். கட்டடங்கள் பல இடிந்து வீழ்ந்த அதிகாலை நேரம் என்பதால் ஆழ்ந்த நித்திரையிலிருந்தோர் தன்னிலை அறிவதற்குள் கட்டட இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். இந்நிலநடுக்கம் சுமார் 10 நிமிடங்கள் நீடித்த நிலையில், 6.7 ரிச்டர் அளவில் மற்றுமொரு அதிர்வு உணரப்பட்டது.

இந்நிலநடுக்கத்தால் அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட கட்டடங்கள் சீட்டுக்கட்டுகளைப்போல சரிந்து வீழ்ந்தன.

இதைத்தொடர்ந்து அதே நாளில் மதியம் 1.45 மணியளவில் 7.5 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானது. பின்னர் 3 மணியளவில் 6 ரிச்டர் அளவில் மேலுமொரு நிலநடுக்கம் ஏற்பட்டது. முதல் நடுக்கத்தில் ஆட்டங்கண்ட கட்டடங்கள் அடுத்தடுத்த தொடர் நிலநடுக்கத்தால் தரைமட்டமாயின. இந்நிலநடுக்கத்தால் துருக்கியின் தெற்கு மற்றும் மத்திய பகுதி, சிரியாவின் வடக்குப் பகுதி ஆகியன மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. நேற்று (13) துருக்கியில் 4.7 ரிச்டர் அளவில் மீண்டுமொரு நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

துருக்கியில் கடந்த திங்கட்கிழமை பதிவான 7.8 ரிச்டர் நிலநடுக்கத்தின் பின்னர் இதுவரை 2356 ஆப்டர்ஷொக் எனப்படும் பின் அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. இது நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் மேலும் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். பலர் தங்களின் இருப்பிடங்கள் செல்வதற்கு அஞ்சி வீதிகளிலேயே தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நிலநடுக்கத்தால் உருக்குலைந்துள்ள துருக்கி மற்றும் சிரியாவுக்கு உதவ 95 சர்வதேச நாடுகள் முன்வந்துள்ளதுடன் சுமார் 1,10,000 மீட்புப் பணியாளர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளதுடன், கிரேன்கள், ட்ரெக்டர்கள், புல்டோசர்கள் உட்பட 5,500இற்கும் மேற்பட்ட வாகனங்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன என துருக்கி இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## போருக்கு செலவிடுவதைவிடுத்து நிலநடுக்கத்தை தாங்கும் வீடுகளைக் கட்டுங்கள்

### டச்சு புவியியல் ஆராய்ச்சியாளர் அறிவுரை

''போருக்குப் பதிலாக நிலநடுக்கத்தைத் தடுக்கும் வீடுகளைக் கட்டுவதற்குப் பணத்தைச் செலவழிக்க வேண்டும்'' என துருக்கி, சிரியா நிலநடுக்கத்தை முன்னரே கணித்து எச்சரித்த டச்சு ஆராய்ச்சியாளர் பிராங்க் ஹூகர்பீட்ஸ் தெரிவித்துள்ளார்.

துருக்கியில் ஏற்பட்ட வரலாறு காணாத பூகம்பத்தால் துருக்கி மற்றும் அதன் அண்டைநாடான சிரியாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 36,000ஐ கடந்துள்ளது. இந்த நூற்றாண்டின் மிக மோசமான இயற்கை பேரழிவாக இதனை புவியியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.



இந்த மிகப்பெரிய நிலநடுக்கத்தை மூன்று நாட்களுக்கு முன்பு கணித்திருந்தார் டச்சு புவியியல் ஆராய்ச்சியாளர் ப்ராங்க் கூகர்பீட்ஸ். இதனைத் தொடர்ந்து அவர் இணையத்தில் பிரபலமானார்.

இந்நிலையில், ப்ராங்க் கூகர்பீட்ஸ் பதிவிட்ட பதிவொன்று மீண்டும் வைரலாகியுள்ளது. அதில் உலக நாடுகளுக்கு அவர் செய்தி ஒன்றை அளித்திருக்கிறார். இதுகுறித்து பிராங்க் ஹூகர்பீட்ஸ் தனது ட்விட்டர் பக்கத்தில்,

''போர் செய்வதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக நிலநடுக்கத்தைத் தடுக்கும் வீடுகளைக் கட்டுவதற்குப் பணத்தைச் செலவழிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அது ஒரு பெரிய முன்னேற்றமாக இருக்கும்'' - என்று பதிவிட்டுள்ளார்.

அவரது கருத்தை இணையத்தில் பலரும் ஆதரித்துள்ளனர்.

## நிலநடுக்கத்தை எதிர்த்து வானுயர்ந்து நிற்கும் பொறியியல் அதிசயங்கள்



உலகின் மிக உயர்ந்த கட்டடங்களில் ஒன்று டுபாயில் உலா புர்ஜ் கலீபா. 2716 அடி உயரம் கொண்ட புர்ஜ் கலீபா 160 தளங்களைக்கொண்டது. இந்த பொறியியல் அதிசயம் ரிச்டரில் 8 புள்ளியில் பதிவாகும் கடுமையான நிலநடுக்கத்தைக்கூட தாங்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டில் இப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டபோது புர்ஜ் கலீபா கட்டடத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இதற்குக் காரணம், இதன் கட்டுமானம் முக்கோண வடிவிலான கனமான கொன்கிரீட்களாலும், பலமான ஸ்டீல்களாலும் அமைக்கப்பட்டிருப்பதேயாகும்.

மேலும், அமெரிக்காவின் கனமான இறப்பர் மற்றும் ஸ்ரீல்கள் மீது கட்டப்பட்டுள்ள உட்டா தலைமை செயலகம், சீனாவின் டைபி 101 கட்டடம், ஜப்பானின் யக்கோமா டவர், கோலாலம்பூர் இரட்டை கோபுரம் மற்றும் சில கட்டடங்கள் நிலநடுக்கத்தை எதிர்த்து நிற்கும் வகையில் கட்டப்பட்டுள்ளன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7